கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2021. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 145 | இதழ் : 17 | திகதி : 25.12.2021 | விலை : 50.00

## திருத்தந்தையின் நத்தார் செய்தி



கொரோனா பெருந்தொற்றின் விளைவாக கிறிஸ்மஸ் ஒளி மங்கிப் போனது போல் தோன்றினாலும் அவ் வேதனைகளின் மத்தியிலும் கிறிஸ்துவின் பிறப்பு விழா ஆத்மாவின் இதமான இசையாகவே ஒலிக்கிறது. காரணம் அது இறைவனின் பரிவும் மென்மையும் பொருந்திய அன்பின் பெருவிழா. திருத்தந்தை 6ம் பவுலுடைய வார்த்தையில் "நாம் வாழும் இவ்வுலகு அழுகையில் மூழ்கிப்போகாது உண்மை அழகைத் தேடுகிறது." உண்மை அழகு மனித உடல் எடுத்துத் துலங்கிய குழந்தையின் முகத்தில் காட்சி தந்தது. ☞ 11

## யாழ் ஆயரின் நத்தார் செய்தி



"சொல்ல முடியாத வேதனைகளை பெரும் தொற்றினாலும், அரசியல் குழப்பங்களினாலும், பொருளாதாரப் பின்னடைவுகளினாலும் அனுபவித்து வருகின்றோம். எமக்கு மீட்புக் கிடைக்குமா என்ற அங்கலாயப்பு எம் மனங்களில் நிலை கொண்டுள்ளது. இறைவனின் இரக்கம் மனித மீட்பின் அருள் அடையாளமான குழந்தை இயேசு எம் உள்ளங்களிலும், இல்லங்களிலும் பிறக்கின்றார். அவ் இயேசு கொணரும் நிறை அன்பு எம் எல்லோரது வாழ்விலும் மீட்பைக் கொணர்வதாக."

முழுமையான செய்தியைப் பக்கம் 02ல் காண்க



எங்கே செல்லும் இந்த பாதையென
ஏங்கியபடி விரிகின்ற துயரங்களூடே
கவிகிறது
தெய்வ குழந்தையொன்றின்
மானிட தாகம்
இந்த சூரைக்காற்றின்
சுழலின் நடுவில்
அங்கொரு விண்மீனாய் விடிகிறது
இந்த நம்பிக்கை ஒளி
காலங்களூடே பேசும் தெய்வம்
களத்தில் உள்ளார்
உருவமற்ற மரணப்பொறிகளின்
திறந்த வெளியாகி நீள்கிற
வாழ்க்கை
"விலையேறப் பெற்றது"
எனினும்
வாழ்வின் சாளரங்களை திறந்துவிடு
சுயநல கவசங்களை உடைத்துக்கொண்டு
பெருநதிக்குள் இணை
கூட்டொருமித்து புறப்படு
மெல்லிய அன்பின் வெளிச்சமே
இதயத்தின் தொற்றாகட்டும்
எறியத் துணிவுகொள் போலி கவசங்களை
கால குழந்தையின்
மாசற்ற பிரியமும் அதுவே

– சி. அ. அருட்செல்வன்










பாதுகாவலன்
வாசக நேயர்களுக்கு
இனிய நத்தார்
புது வருட நல் வாழ்த்துக்கள்



கூட்டொருங்கியக்கப் பயணத்துடன் இணைந்து

## அன்பிய ஆண்டு - 2022

ஒன்றிப்பு ★ பங்கேற்பு ★ மறைப்பணி








ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

# எமது எண்ணம்

## மனச்சாட்சியுடன் விளக்கமளிக்கும் புத்தாண்டுச் செய்தி

ஈழத்தமிழர் அரசியலில் கத்தோலிக்கத் திருஅவையின் பங்களிப்பு பிரதான பாத்திரம் வகித்தது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. எழுபது வருட அரசியல் போராட்டத்தில், கத்தோலிக்க திருஅவையின் அருட்பணியாளர்கள் பலர் கொலை செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டுச் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டும், சித்திரவதைக்கு உள்ளாகியும் இருந்த வரலாறு உலகறிந்ததே.

வடக்குக் கிழக்கில் நான்கு தமிழ் ஆயர் இல்லங்கள் அமைக்கப்பட்டிருப்பதன் மூலம், தமிழர் பிரதேசங்களின் சிறப்பு மேலும் உறுதிப்படுத்தப்படுகின்றது. சமய மேய்ப்புப் பணியோடு, அரசி யல் ஈடுபாடும் அருட்பணியாளர்கள் பலருக்கு இருப்பதால், சாதி சமய வேறுபாடு கடந்த தமிழ்த்தேசியக் கோட்பாட்டையும் அது நிறுவியுள்ளது.

மேய்ப்புப்பணிக்காக அமைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு ஆயர்மன்றத்தின் பணியும், தமிழர்களின் மரபுவழிப் பண்பாட்டை எடுத்தியம்புகின்றது. ஈழத்தமிழர் மரபுரிமைகள் தொடர்பான ஆய்வுகளை அருட்தந்தையர்கள் பலர் மேற்கொண்டிருக்கின்றனர். அமரர் அருட்பணி மரியசேவியர் அடிகளார், சைவசித்தாந்த ஆய்வை மேற்கொண்டு, சைவத்துக்கும் தமிழுக்கும் பெருமை சேர்த்தவர்.

1981 ஆம் ஆண்டு தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை ஆரம்பித்தவர் தனிநாயகம் அடிகளார். தமிழகம் உள்ளிட்ட பல நாடுக-ளில் அந்த மாநாடு நடத்தப்பட்டு தற்போது செம்மொழி மாநாடாக அது முன்னேறியிருக்கிறது. 1505 ஆம் ஆண்டு இலங்கைத்தீவின் காலிப் பிரதேசத்துக்கு வந்த போத்துக்கேயர் கோட்டை மற்றும் யாழ்ப்பாண இராஜ்ஜியங்களைக் கைப்பற்றியபோது பலர் கத்தோலிக்க சமயத்துக்கு மாற்றப்பட்டனர்.

தமிழ். சிங்கள மக்கள் பலர் அவ்வாறு மாற்றமடைந்தாலும் பிற்காலத்தில், தமது பாரம்பரிய சமயங்கள் மற்றும் தத்தமது இனத்தின் கலைகலாசாரங்களை அப்படியே பின்பற்றினர். கத்தோலிக்க சமயத்தவர்களாக இருந்தாலும் தமிழ் சிங்கள மக்கள் தத்தமது மரபுரிமைகளைக் கைவிடவில்லை. இன்று தென்பகுதியில் வாழும் கத்தோலிக்க சிங்கள மக்கள் தமது பௌத்த கலாசாரங்களைப் பேணுவது போன்று, ஈழத்தமிழ் மக்களும் சைவப்பாரம்பரியங்கள் அதனுடான பண்பாட்டு மரபுரிமைகள் தமிழர்களுக்குரியவை என்ற எண்ணக்கருவுடன் பேணி வருகின்றனர்.

ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னமே 1982 ஆம் ஆண்டு சில அருட்பணியாளர்கள் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகினர். கைது செய்யப்பட்டனர். போராளிகளையும் பொதுமக்களையும் காப்பாற்ற இராணுவத்துடன் வாதிட்டப் பின்னர் காணாமல் ஆக்கப்பட்ட அருட்பணி பிரான்சிஸ் ஜோசப் ( ) அடிகளார், போன்றோர் ஈழத்தமிழர் வரலாற்றில் என்றும் நினைவுகூரப்பட வேண்டியவர்கள்.

1982 ஆம் ஆண்டு அருட்பணியாளர்கள் சிலர் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி மூன்று ஆண்டுகளில் அதாவது 1985 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் மன்னாரில் அருட்தந்தை மேரி பஸ்ரியன் வங்காலையில் ஆலயத்திற்குள் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். 1985இல் தென்பகுதிச் சிறைச்சாலை ஒன்றில் விவிலியம் எரிக்கப்பட்டுச் சில மாதங்களிலேயே பஸ்ரியன் அடிக-ளார் கொலை செய்யப்பட்டார். ஆகவே விவிலியம் எரிக்கப்பட்டாலும் அருட்பணியாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டாலும் ஈழத்தமிழர் அரசியல் விடுதலைக்காகக் கத்தோலிக்க திருஅவை அமைதிகாத்தது.

இன்றுவரை அந்த அமைதி தொடருவதோடு வடக்குக் கிழக்கு ஆயர் மன்றத்தின் மூலம் அனைத்து மக்களும் சமயம் கடந்த பணியோடு சமூக விழுப்புணர்வுகளையும் ஆயர் மன்றம் செய்து வருகின்றது.

போரில் உயிர்நீத்தவர்கள் வெறுமனே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் அல்ல. மாறாகக் கொல்லப்பட்ட உயிர்கள் அனைத்தும் மண்ணின் விடுதலைக்காகவும் ஈழத்தமிழர் மரபுரிமையை உலகில் நிலைநிறுத்துவதற்காகவும் விதைக்கப்பட்ட விலைமதிப்பற்ற உயிர்கள். இந்த உயிர்த் தியாகங்களைக் குறிப்பிட்ட அந்த நாளில் கூட்டு உரிமையாக நினைவேந்தல் செய்யும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு.

ஆனால் அந்த நாளில் மாத்திரமல்ல. ஒவ்வொரு நாளும் எங்கள் மனச்சாட்சியோடு இணைத்து அத்தனை உயிர்களையும் நினைவுகூரவேண்டிய கடப்பாடு அனைவருக்கும் உண்டு. புத்தாண்டில் இந்தச் செய்தி அனைவரின் உள்ளத்திலும் பதியட்டும் தேசம். சுயநிர்ணய உரிமை அங்கீகாரம் பெறவேண்டுமானால் சாதி. சுயம். கட்சி வேறுபாடு கடந்து ஈழத்தமிழர்கள் ஒருமித்த குரலில் செயற்பட வேண்டிய காலமிது.

ஆனால் இது புதிய சிந்தனையல்ல. இருந்தாலும் இந்தச் சிந்தனைக்கு மேலும் மெருகூட்டப் புத்தாண்டில் புத்தி பிறக்க வேண்டும்.

**அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்**

# யாழ் ஆயரின் நத்தார் செய்தி

**இறை இயேசுவில் பிரியமான அன்பு நெஞ்சங்களே!**

பிறந்துள்ள பாலக இயேசு கொணரும் அன்பும், சமாதானமும், நம்பிக்கை நிறை வாழ்வும் உங்கள் மீதும் உங்கள் குடும்பங்கள் மீதும் நிறைவாகக் கிடைப்பதாக.

பெரும் தொற்றின் தாக்கத்தில் இருந்து முற்றாக மீளாத நிலையில் மீண்டும் ஓர் நத்தார், புதுவருட விழாக்களைக் கொண்டாடுகின்றோம். ஆன்மீக ஆயத்தங்களுடன் இவ் விழாவை நாம் கொண்டாடினாலும் எம்மில் நோயின் தாக்கமும், நோய் குறித்த உள்ளத்து அச்சமும் இன்னமும் மறையவில்லை.

அன்று இயேசுவின் பிறப்பு இருள் சூழ்ந்த நிலையில் வாழ்ந்த மக்களுக்கு விடிவைக் கொணர்ந்தது. அவ்விடிவே மனித அவலங்களுக்கு மீட்புமாயிற்று. கிறிஸ்துவின் பிறப்பு அன்று அவலத்தில் வாழ்ந்த மனிதனுக்கு மீட்பைக் கொணர்ந்தது. விண்ணகத் தந்தையின் இரக்கத்தை மண்ணகத்தில் உணர்த்தியது. இதையே எசாயா இறைவாக்கினர் நூலில் இவ்வாறு படிக்கின்றோம். "காரிருளில் நடந்துவந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர்மேல் சுடர் ஒளி உதித்துள்ளது." (எசாயா 9:2.)

இன்றும் சொல்ல முடியாத வேதனைகள் பெரும் தொற்றினாலும், அரசியல் குழப்பங்களினாலும் பொருளாதாரப் பின்னடைவுகளினாலும் அனுபவித்து வருகின்றோம். எமக்கு மீட்பு கிடைக்குமா என்ற அங்கலாய்ப்பு எம் மனங்களில் நிலை கொண்டுள்ளது. இறைவ-னின் இரக்கம் மனித மீட்பின் அருள் அடையாளமான குழந்தை இயேசு எம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் பிறக்கின்றார். அவ் இயேசு கொணரும் நிறை அன்பு எம் எல்லோரது வாழ்விலும் மீட்பைக் கொணர்வதாக.

பிறக்கவிருக்கும் புதிய 2022ம் ஆண்டை யாழ் திருஅவையில் கூட்டொருங்கியக்கப் பயணத்துடன் இணைந்து அன்பிய ஆண்டாக பிரகடனம் செய்துள்ளோம். அகில உலகத் திருஅவை 2023ம் ஆண்டில் நடைபெறவுள்ள உலக ஆயர்கள் மாமன்றத்துக்கான தயாரிப்புப் பணிகளை முன்னெடுத்துள்ள நிலையில், நாமும் பல்வேறு செயற் திட்டங்களை எமது மறைமாவட்டத்தில் நடைமுறைப்படுத்தி வருவதை உங்கள் பங்குத்தந்தையர்கள் மூலம் நீங்கள் அறிந்து வருகின்றீர்கள்.

"இணைந்து பயணிக்கும் திருஅவை" ஒன்றிப்பு, பங்கேற்பு, நற்செய்தி அறிவிப்பு என்ற மையக்கருத்துடன் திருஅவையின் புதுப்பித்தலுக்கான முயற்சிகள் ஆரம்பமாகியுள்ளன. அன்பிய ஆண்டில் சிறப்பாக நாம் செவிமடுத்தல், பகிர்தல், ஏற்றுக்கொள்ளல், மன்னித்தல், ஒரு மனத்தோராய் வாழ்தல் போன்ற பண்புகளை மையப்படுத்தி எம் அன்பிய சமூகங்களில் செயற்திட்டங்களை முன்னெடுக்கும் வேளையில் எமது தலத்திருஅவையின் அழைப்பையும் முன்னுரிமைப்படுத்தி திருஅவையின் புதுப்பித்தலுக்கு எம் ஒத்தழைப்பையும் பங்கேற்பையும் நிறைவாக வழங்குவோம்.

'ஒமிக்ரோன்' கிருமியின் தாக்கம் பல உலக நாடுகளில் வேகமாகப் பரவி வெகுவாகப் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றது. நாம் விழிப்பாய் இருந்து இந்நோய் எம் பிரதேசங்களை அணுகாதிருக்க அனைத்து சுகாதார ஒழுங்கு முறைகளையும் கடைப்பிடித்து வாழ்வது எமது கடமையாகும்.

மலர்கின்ற புதிய ஆண்டில் எம்மை வருத்தும் பெருந்தொற்று, அரசியல் நெருக்கடி, பொ-ருளாதாரப் பின்னடைவு, உணவுப்பற்றாக்குறை போன்ற பெரும் துயர் நீங்கி மன மகிழ்வுடன் நிறைவாழ்வு வாழ உங்கள் அனைவருக்கும் என் ஆசீரை வழங்கி நிற்கிறேன்.

**பேரருட்கலாநிதி. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்**


# கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் நத்தார் செய்தி - 2021

இயேசு பிறப்பினைக் கொண்டாடும் தருணமான நத்தார் மீண்டும் வருகிறது. "விண்ணிலே இறைவனுக்கு மகிமையும், பூமியில் நல்மனதோருக்கு அமைதியும் உண்டாகுக." ( லூக் 2:14 ), என்னும் வானதூதர்களின் நற்செய்தி எம் செவிகளில் கேட்கிறது. இறைவன் மனிதன் மேல் கொண்ட எல்லையில்லா அன்பினால் மனுவுருவெடுத்து எம்மில் ஒருவரைப் போல் நாசரேத் தூர் இயேசுவாக உருவெடுத்தார் என்பதைக் கிறிஸ்து பிறப்பு விழா அறிக்கையிடுகின்றது. ஆகவே இது கடவுளைக் கொண்டாடும் ஒரு விழாவாகும். இயேசுவில் வெளிப்படுத்தப்பட்ட இறைவனின் எல்லையில்லா அன்புக்காகக் கடவுளைப் புகழ்ந்து அவருக்கு நன்றி கூறும் அதேவேளை நாமும் அதே அன்பை ஒருவர் மற்றவருடன் பகிரங்கமாக பகிர்ந்து வாழ அழைக்கப்படுகின்றோம். எமது "மனிதர் உருவாக்கிய " வேற்றுமைகளிலிருந்து மேலே எழுந்திட அழைக்கப்படுகின்றோம். அத்தோடு பல்வகைத்தன்மை நிறைந்த எம் சமுதாயத்திலே மனமாற்றத்தினதும் அமைதியினதும் கருவிக-ளாக நாம் வாழ்வது எமது கடமையாகும். -

இயேசு ஏழ்மையும் எளிமையும் நிறைந்த சூழலான மாட்டுத்தொழுவத்தில் பிறந்தது, மாட்டுத்தொழுவத்திலிருந்து வெளிப்படும் செய்தியை நாம் பின்பற்றுவதற்கு சவாலாக அமைகின்றது. தனது வாழ்வாகிய ஏழ்மையையும், எளிமையையும் நாம் பின்பற்ற வேண்டுமென்பதே இயேசுவின் தேவையாக இருக்கின்றது. மேலும் அவர் நாம் எப்போதும் ஏழைகள் மீது கருணை உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று கற்பிக்கிறார். அதிகமான பொ-ருளாதார சிக்கல்களோடு, பற்றாக்குறைகளோடும் வாழ்பவர்கள் மத்தியில் வாழும் எங்களுக்கு, இச்செய்தி மிகவும் பொருத்தமானதாகும். அன்றாட உணவைத் தேடிக் கஷ்டப்படும் குழந்தைகள் உட்பட பலரை நாம் அறிந்துள்ளோம். பல பெற்றோர் தமது குடும்பத் தேவைகளை நிறைவேற்ற சரியான வேலைவாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். பல நோயாளிகளும், வயோதிபர்களும் மருத்துவ தேவைவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலும், இன்னும் பலர் தமக்குத் தேவையான மருந்துகளை வாங்க இயலாது அவதியுறும் சூழலானது எமது நாட்டில் நிலவுகின்றது. துரதிஷ்டவசமாக எமது பிள்ளைகள் பாடசாலைக் கல்வியை தகுந்த விதத்தில் பெறமுடியாத நிலையில் உள்ளனர். எமது பிள்ளைகளின் சமயப் பயிற்சிகள், மறைக்கல்வி போன்றன வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. இவையும் இன்னும் பல விடயங்களும் பலரின் வாழ்வை நிர்க்கதியாக்கியுள்ளது.

இவ்வாறான சூழ்நிலைகளின் மத்தியில் தான் நத்தார் எம் மத்தியில் பிறக்கின்றது. இவ் ஏழைகளின் கஷ்டங்களில் இரக்கம் கொள்ளுமாறு இயேசு எமக்கு அழைப்பு விடுத்துள்ளார். எமது சகோதர சகோதரிகளின் சுமைகளை குறைக்க வழிகளைத் தேடுவோம். ஏழைகளின் பொருளாதார சுமைகளைக் குறைக்க எத்தனிக்கும் அதேவேளையில் ஏழைகளின் சுமைகளை அதிகரிக்கக் (தொடர்ச்சி 15ம் பக்.)

### குருத்துவ வாழ்வில் 55 ஆண்டுகள்




யாழ் மறைமாவட்டத்தின் மூத்த குருவான அருட்பணி எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார் குருத்துவ அபிசேகத்தின் 55 ஆண்டுகளை இம்மாதம் நிறைவு செய்து ஆண்டவருக்கு நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தார். பாதுகாவலன் பத்திரிகையின் கட்டுரையாளராகவும், பல ஆன்மீக இறையியல் நூல்களை இன்றும் எழுதி வெளியிட்டு வரும் அடிகளாரின் பணி தொடரவும், உடல் உள சுகத்துடன் அடிகளாரின் குருத்துவப் பணி மேலும் சிறக்க பாதுகாவலன் வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

# கூட்டொருங்கியக்கத் திருஅவை என்றால் என்ன என்பதை விளக்கும் திருத்தந்தையின் செபம்

**2023ம் ஆண்டிற்கான ஆயர் மாமன்றத்தின் கருப்பொருளாக 'கூட்டொருங்கியக்கத் திருஅவையாகப் பயணிப்போம்' என்று அறிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் இவ் ஆயர் மன்றம் வெற்றிபெறவும் இதற்கான தலத்திருஅவைகளின் ஆயத்தச் செயற்பாடுகள் தவறின்றி நடைபெறவும் வேண்டும் எனபதற்காக ஒரு சிறப்பான செபத்தையும் எமக்குத் தந்து அடிக்கடி அச்செபத்தைச் செபிக்குமாறு வலியுறுத்தியுள்ளார்.**

**இச்செபத்தை நாம் கவனமாக அவதானிக்கும் போது திருத்தந்தை இவ் ஆயர் மாமன்றம் வழியாகத் திருஅவையில் எத்தகைய ஒரு விளைவை அல்லது மாற்றத்தை எதிர்பார்க்கிறார் என்பதைத் தெளிவாகக் காணமுடிகிறது. இச்செபத்தை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்படுவதால் முதலில் திருத்தந்தை தந்த செபத்தை இங்கு தருகிறேன்.**





தூய ஆவியானவரே நாம் உமது முன்னிலையிலே உமது பெயரால் ஒன்றுகூடி வந்து நிற்கின்றோம்.

நீரே எங்களை வழிநடாத்தும். எங்கள் இதயங்களில் நீரே வந்து குடியமர்ந்தருளும்.

நாம் செல்ல வேண்டிய வழியையும், அதை எப்படித் தொடர வேண்டும் என்பதையும் எங்களுக்குக் கற்றுக் கொடுப்பீராக,

நாங்கள் பலவீனமுள்ளவர்களாகவும், பாவ நிலையிலும் இருக்கின்றோம். இந்நிலையில் நாங்கள் ஒழுங்கீனத்தை ஊக்குவிக்க எங்களை அனுமதியாதேயும். எங்கள் அறியாமை எங்களைத் தவறான பாதையிலே இட்டுச் செல்லவோ, நாங்கள் கைக்கொள்கின்ற பாகுபாட்டு மன நிலைகள் எங்கள் செயல்களை ஆட்கொள்ளவோ விட்டு விடாதேயும்.

உம்மிலே நாங்கள் எங்கள் ஒற்றுமையை காண்போமாக. இவ்வாறாக நேர்த்தியானதும் உண்மையை நோக்கிய பாதையில் இருந்து விலகாமல் முடிவில்லாத வாழ்வை நோக்கிய பயணத்திலே ஒருமித்துப் பயணம் செய்வோமாக.

இவை அனைத்தையும் எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் தந்தையோடும், மகனோடும், இப்பொழுதும் எப்பொழுதும் ஒன்றித்திருந்து பரிபாலனம் பண்ணுகின்ற உமது வழியாக வேண்டி நிற்கின்றோம். ஆமென்.

இச்செபத்தில் அடங்கியுள்ள பல்வேறு அம்சங்களை நாம் கண்டுணரும்போது கூட்டொருங்கியக்கத் திரு அவை என்பது என்னவென்பதை எம்மால் உணர்ந்துகொள்ளமுடியும்.

**1. தூய ஆவியாரிடம் முழுமையான கையளிப்பு**

திருத்தந்தை இவ் ஆயர் மாமன்றம் முற்றும் முழுதாக தூய ஆவியாரால் வழிநடாத்தப்படவேண்டும் என்ற விருப்பத்தை ஆரம்பத்திலேயே வெளிப்படுத்தி அவருடைய பொறுப்பிலேயே இப்பணியை விட்டுவிடுகிறார்.

தூய ஆவியானவரே! நாம் உமது முன்னிலையிலே உமது பெயரால் ஒன்றுகூடி வந்துநிற்கின்றோம். நீரே எங்களை வழிநடாத்தும். எங்கள் இதயங்களில் நீரே வந்து குடியமர்ந்தருளும் என்னும் வேண்டுகோளோடு ஆரம்பிக்கின்ற இச்செபம் இம்மாமன்றத்தின் எந்தவொரு செயற்பாட்டிலும் மனிதர்களாகிய எமது எண்ணங்கள், விருப்பங்கள், எமது செயற்றிட்டங்கள் தலைதூக்கி இதன் நோக்கத்தை திசைதிருப்பி விடக்கூடாது என்பதை சுட்டிக்காட்டிநிற்கின்றன.

இன்று எமது ஆலயத் திரு அவைகளிலும், பங்குத் திரு அவைகளிலும், முழுத்திரு அவையின் செயற்பாடுகளிலும் மேலோங்கி நிற்கின்ற மனித சுயநல எண்ணங்களுக்கும் திட்டங்களுக்கும், செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கின்ற தளமாக இம் மாமன்றம் அமையவேண்டும் என்பதையே தூய ஆவியாரிடமான எமது முழுமையான கையளிப்பு உணர்த்தி நிற்கின்றது.

கடவுளால் வழிநடாத்தப்படுவதற்குப் பதிலாக நம்மை நாமே வழிப்படுத்த விரும்புகின்ற சோதனையிலிருந்து எம்மை நாம் காத்துக்கொள்ள தூய ஆவியாரின் செயற்பாட்டின் அவசியத்தைத் திருத்தந்தை இங்கு உணர்த்துகிறார்.

**2. திருஅவை பயணிக்கவேண்டிய சரியான வழி**

நாம் செல்லவேண்டிய வழியையும் அதை எப்படித் தொடரவேண்டும் என்பதையும் எமக்குக் கற்றுக்கொடுப்பீராக என்று தொடருகின்ற இச்செபம் நாம் ஏற்கனவே பல அம்சங்களில் எமது சரியான வழியிலிருந்து திசைமாறிவிட்டோம் என்ற கசப்பான உண்மையை ஏற்றுக்கொள்வதாக அமைகின்றது.

எம்மிடையே நாம் எற்படுத்திக்கொண்ட பிரிவினைகள், பகைமைகள், போட்டி பொறாமைகள் போன்ற காரணங்களால் நாம் போலிக் கௌரவங்களுக்கு முன்னுரிமை கொடுத்து எமது அடிப்படை விசுவாச விழுமியங்களாகிய அன்பு, மன்னிப்பு, ஒற்றுமை போன்றவற்றைப் பலியாக்கி இறை அரசின் பாதையின் திசையை முற்றாக மாற்றியவர்களாகப் பயணம் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை இவ்வரிகள் எமக்கு ஞாபகமூட்டுகின்றன.

எமது இத்தகைய திசைதிரும்பிய பரிதாப நிலையிலிருந்து சரியான திசைக்கு எம்மை மாற்றுவது மட்டுமல்லாது அச்சரியான பாதையில் எமது பயணத்தைத் தொடரவேண்டிய இறை அருளும் எமக்குத் தேவை என்பதையும் நாம் உணருகிறோம். ஏனென்றால், திசைதிரும்பல்களைக் கண்டுகொள்வது மட்டும் இம்மாமன்றத்தின் நோக்கமல்ல, மாறாக, சரியான திசையில் தொடர்ந்து பயணிப்பதே முக்கியமானதாகும் எனபதையும் இச்செபம் உணர்த்துகிறது.

**3. எமது பாவநிலையும் பலவீனங்களும் அகலட்டும்**

தூய ஆவியாரின் வழிநடாத்தலுக்கு எம்மை முழுமையாகக் கையளிக்கவேண்டுமென்றால் எமது

**அருட்பணி. ப. யோ. ஜெபரட்ணம்.**

பாவநிலையையும் பலவீனங்களையும் ஏற்றுக்கொண்டு மன்னிப்பு வேண்டி மன்றாடவேண்டும் என்பதைத் தொடரந்து வருகின்ற இச்செபத்தின் வரிகள் அழைத்துநிற்கின்றன. ஏனெனில் எமது பலவீனங்கள் ஒருபோதும் எம்மை நேரிய வழியில் இட்டுச்செல்லாது, மாறாக ஒழுங்கீனத்தையே ஊக்குவிக்கும் எனபதை ஏற்றுக்கொள்கின்ற செப-வரிகள் இவையாகும்.

பல சந்தர்ப்பங்களில் எமது விசுவாச செயற்பாடுகளில் தனிமனித அல்லது ஒரு குழுவினருடைய ஆதிக்கம், கீழ்படிவின்மை, பழிவாங்கல்கள், முன்னுரிமைக்கான போட்டிகள், ஏற்றத்தாழ்வுகள், அகங்காரம், புறக்கணிப்பு போன்ற ஒழுங்கீனங்கள் தலைதூக்கி நிற்பதை நாம் அவதானிக்கும்போது இவை எல்லாம் எமது பாவ நிலைகளின் விளைவுகள் எனபதை அறியாமலேயே எமது விசுவாசப் பயணத்தைத் தவறான திசையில் தொடர்ந்து கொண்டிருக்கின்ற துர்ப்பாக்கிய நிலை மாறவேண்டுமென்பதுமே இம்மாமன்றத்தின் அறைகூவலாகும்.

**4. அறியாமையும் பாகுபாட்டு மனநிலையும் நீங்கட்டும்**

இத்தகைய விசுவாசச் சீர்கேடுகளுக்கு எமது அறியாமையும் அதன் விளைவாகிய பாகுபாட்டு மனநிலையுமே காரணமென்பதைத் திருத்தந்தை வலியுறுத்தி பின்வரும் வரிகளை செபிக்குமாறு அழைக்கின்றார்.

"எங்கள் அறியாமை எங்களைத் தவ-றான பாதையில் இட்டுச் செல்லவோ, நாங்கள் கைக்கொள்ளுகின்ற பாகுபாட்டுமனநிலைகள் எங்கள் செயல்களை ஆட்கொள்ளவோ விட்டுவிடாதேயும்".

நாம் எல்லாரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் என்ற அறியாமை, நாம் ஒருவருக்கொருவர் சகோதரர் சகோதரிகள் என்ற அறியாமை, எம் எல்லாரினதும் மீட்பர் இயேசுவே என்ற அறியாமை, இறைவன் எல்லாரையும் சமத்துவமாக அன்புசெய்கிறார் என்ற அறியாமை, எம் எல்லாரினதும் பயணம் ஒன்றே என்ற அறியாமை, இவ் உலக வாழ்வு நிரந்தரமற்றது என்ற அறியாமை, முடிவில்லா வாழ்வே எமது குறிக்கோள் என்ற அறியாமை. இவ்வாறு எமது அடிப்படை விசுவாச வாழ்வுபற்றிய அறியாமைகளே எமது கூட்டொருங்கியக்கத் திரு அவைக்குக் களங்கம் ஏற்படுத்துகின்றன என்ற உண்மையை உணருமாறு இச்செபம் எம்மை அழைத்து நிற்கிறது.

திருஅவையின் கூட்டொருங்கியக்கப் பயணத்திலே யாருமே புறக்கணிக்கப்படக்கூடாது என்ற திருத்தந்தையின்விருப்பம்நிறைவேறவேண்டுமாயின் மேற்படி அறியாமைகளிலிருந்து நாம் விடுதலை பெறவேண்டியது அவசியமானதாகும் இத்தகைய அறியாமைகள் நீங்கினால்தான் எம்மிடையே இருக்கின்ற பாகுபாட்டு மனநிலைகள் நீங்கும் என்பதை இச்செபம் வலியுறுத்தி நிற்கின்றது.

**5. திரித்துவ இறைவனில் ஒற்றுமை காண்போம்**

"நாம் ஒன்றாக இருப்பதுபோல அவர்களும் ஒன்றாயிருப்பார்களாக" (காண்க. யோவான் நற்செய்தி 17ம் அதிகாரம்) என்னும் இயேசுவின் செபத்தில் அடங்கியுள்ள திரித்துவ இறைவனின் ஒன்றிப்பே எமது திருஅவையின் வாழ்விற்கு அச்சாரம் என்பதையும், முடிவில்லா வாழ்வு நோக்கிய எமது ஒருமித்த பயணத்திற்கு இவ் ஒன்றிப்பு வாழ்வே அடிப்படை என்பதையும் திருத்தந்தை தந்த செபத்தின் இறுதி வரிகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன.

"உம்மிலே நாங்கள் எங்கள் ஒற்றுமையைக் காண்போமாக." பன்மையில் ஒருமை என்பதே திரித்துவ இறைவனில் நாம் காணுகின்ற ஒற்றுமையாகும். தந்தை, மகன், தூய ஆவியாராக, மூவொரு இறைவனாக, முழுமையான புரிந்துணர்வோடும், ஒருவரை ஒருவர் முழுமையான ஏற்றுக்கொள்ளலோடும், முழுமையான மதிப்போடும், விட்டுக்கொடுப்போடும், தனித்துவமான பணிகளோடும், முழுமையான தங்கியிருப்போடும் ஒன்றாயிருக்கின்ற திரித்துவ இறைவனின் ஒன்றிப்பே இன்றைய திருஅவையின் கூட்டொருங்கியக்கப் பயணத்திற்கு முன்னோடியாகும் என்பதை இச்செபம் கூறிநிற்கிறது.

**6. திருஅவையின் ஒரே வழி கூட்டொருங்கியக்க வழியே**

எமது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் எல்லாரும் ஒரே இலட்சியத்தோடு, ஒரே திசையில் ஒன்றாகப் பயணிக்கின்ற கூட்டொருங்கியக்கப் பயணவழியே அன்றி திரு அவைக்கு வேறு வழியே கிடையாது என்பதை ஆணித்தரமாக வலியுறுத்தி இதனை உணர்த்தும் வகையில் எமக்குத் தந்துள்ள இச்செபத்தை எல்லாரும் எப்போதும் நம்பிக்கையோடு செபிப்போம். ஆயர் மாமன்றத்தின் முழுமையான வெற்றிக்கு எமது பங்களிப்பை நல்குவோம்.

**திருஅவைக்கு களங்கம்**
**ஏற்படுத்துகின்ற**
**எமது வாழ்வுநிலைகள் மாறட்டும்.**
**கூட்டொருங்கியக்கக்**
**திரு அவையின் பயணத்தில்**
**எமது கால்களும் இணையட்டும்.** ■

# 2023 ஒக்ரோபரில் உரோமையில் இடம்பெறவுள்ள 16 ஆவது உலக ஆயர்களின் மாமன்றத்திற்கு இத்தகைய தயாரிப்புக்கள் ஏன்?

அருட்பணி. எஸ்.ஜே.இம்மானுவேல்
தமிழாக்கம் : அருட்பணி ஜீவா போல் (அமதி)




நடைபெறவிருக்கும் 16ஆவது உலக ஆயர்களின் மாமன்றத்திற்கு முழுத் திருஅவை ரீதியாகவும் மறைமாவட்டங்கள் மற்றும் பங்குத்தளங்கள் ரீதியாகவும் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆயத்தங்கள் வழமைக்கு மாறானவையாகவுள்ளன.

2ஆம் வத்திக்கான் சங்கத்தைத் தொடர்ந்து உலக ஆயர்களின் மாமன்றம் திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் அவர்களால் நிறுவப்பட்டது. 2 ஆம் வத்திக்கான் சங்கத்தின் தொடர் முயற்சிகளை முன்னெடுத்துக் கண்காணிக்கும் நோக்கம் கொண்டதாக ஆயர்களின் மாமன்றம் ஏற்படுத்தப்பட்டது. 2ஆம் வத்திக்கான் சங்கத்தால் முன்னிலைப்படுத்தப்பட்ட முக்கிய கருப்பொருட்களுடன் பல திருத்தந்தையர்களின் வழிநடத்துதலின் கீழ் இதுவரை 15 மாமன்றங்கள் நடைபெற்றுள்ளன. வழமையாக, இம் மாமன்றங்களுக்கு உலக ஆயர்களின் மன்றங்களில் இருந்து கிட்டத்தட்ட 250 ஆயர்கள் ஒக்டோபர் மாதங்களில் கலந்து கொள்வார்கள்.

மாமன்றத்திற்கான ஆயத்த நடவடிக்கையாக இரண்டு உரோமை ஏடுகள் அதில் பங்குகொள்ளும் ஆயர்களின் வழிகாட்டியாக அனுப்பி வைக்கப்படும். அவை ஆயத்த ஆவணம் (Lineamenta) மற்றையது தயாரிப்புக் கையேடு (Instrumentum Laboris) ஆகும். இவ்விருமாமன்றங்களில் அதிகாரபூர்வமற்ற வகையில் கலந்து கொண்டது எனக்கு வழங்கப்பட்ட ஒரு அரிய வாய்ப்பாகக் கருதுகிறேன்.

**1) 1974இல் கொழும்பு கத்தோலிக்க மெசென்சர் பத்திரிகையால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பத்திரிகையாளராக “திருத்தூதுரைத்தலும் பண்பாடும்”** (Evangelization and Culture) **பற்றிய மாமன்றத்தின் தினசரி நண்பகல் கூட்டங்களில் வத்திக்கானில் கலந்து கொண்டேன்.**

**2) 1987இல் இடம்பெற்ற பொது நிலையினர்** (Synod on Laity ) **பற்றிய மாமன்றத்திற்கு 1986 செப்டெம்பரில் டோக்கியோவில் 130 ஆசிய ஆயர்களின் ஆயத்த நிறை அமர்வு ஒன்று நிகழ்ந்தது. அந்தக் கூட்டத்திற்கான தலைமை உரை வழங்க நான் ஓர் ஆசிய இறையியலாளர் என்ற ரீதியில் அழைக்கப்பட்டேன். அடுத்த ஆண்டில் உரோமில் 1987ஆம் ஆண்டு ஆயர்கள் மாமன்றத்தின் போது பங்களிப்புக்களுக்கு சில எழுத்துப் பிரதிகளைத் தயாரித்து [ஆசிய ஆயர்களுக்கு] உதவ அழைக்கப்பட்டிருந்தேன்.**

## 2023 ஆம் ஆண்டின் மாமன்றத்திற்கான விசேட தயாரிப்புகள் ஏன்?

கூட்டு ஒருமித்த திருஅவை (Synodality of the Church) பற்றிய இந்த மாமன்றம் புதுமையானதும், முன்னொருபோதும் இல்லாததுமான மாற்றங்களை இம்மூன்றாவது ஆயிரம் ஆண்டின் திருஅவையாக உருவாகுவதற்கான அறிகுறிகளைக் கொண்டதாகத் திகழ்கிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் தமது அர்ப்பண வாழ்வால் ஒரு இயேசு சபைத் துறவியானவர். இவர் ஏற்கனவே இரு சுற்று மடல்களை வெளியிட்டுள்ளார். “இறைவா உமக்கே புகழ்” (Laudato Si) என்ற சுற்று மடலால் எமது ஒரே ஒரு இல்லமாகிய பூமித்தாயை மதித்துப் பாதுகாக்கவும், “அனைவரும் உடன்பிறந்தோர்” (Fratelli tutti) என்ற மற்றைய சுற்று மடலில் அனைத்து மனிதர்களின் சகோதரத்துவத்தைச் செயற்படுத்த முழு மனிதகுலத்திற்கு அழைப்பு விடுத்தார். அதுமட்டுமல்ல, அவரது நாளாந்த திருஅவை பற்றிய சிற்றுரைகள் - அவற்றிற்கு உள்ளேயிருந்து சில விமர்சனங்கள் வந்த போதிலும், உலக கவனத்தை அவை பெரிதும் ஈர்த்துள்ளன. அத்தோடு திருஅவை எதிர்காலத்தை நோக்கித் தைரியமாக முன்னேறிச் செல்ல நம்பிக்கையும் கொடுத்துள்ளன.

2023ஆம் ஆண்டில் வரவிருக்கும் மாமன்றத்தின் ஒரு புதிய திருஅவையின் பிறப்பிற்கும் ஆற்றல் வளம் கொண்டது என்பதனை திருஅவையின் வரலாற்றில் முந்தைய திருப்புமுனைகளைச் சுருக்கமாகத் திரும்பிப் பார்க்கும்போது தெளிவாகும்.

**1) கி.பி. 49 ஆம் ஆண்டு பொது சங்கம் யூத திருஅவை புற இனத்தவரின் உலகத்தை நோக்கித் திரு அவையைத் திறத்தல்.**

49 இல் ஜெருசலேம் முதல் பொதுச்சங்கத்தில் ஜெருசலேம் எல்லைகளுக்குள் முடங்கிக் கிடந்த ஒரு பச்சிளம் யூத திருஅவையானது புரட்சிகரமான நிகழ்வைக்கண்டது. திருத்தூதர் பவுல் அடிகளாரின் துணிவுகரமான முன்னெடுப்பால் தூண்டுதல் பெற்று புற இனத்தவருக்கு விருத்த சேதனத்தை நீக்குவதன் மூலம் புற இன உலகிற்கே திரு அவை தம்மைத்திறந்து விட்டது.

**2) திருதெந்து பொதுச் சங்கம் வரை மேற்கத்திய உரோமைக் கத்தோலிக்க திரு அவை:**

4ஆம் நூற்றாண்டிலிருந்து உரோமானிய திருஅவையின் வழிகாட்டுதலின் கீழ் கிறிஸ்தவம் உரோமைப் பேரரசின் பல்வேறு பகுதிகளுக்கும் பரவியது. திருஅவையானது அதனுள் பாவக்கறை கொண்ட சில தலைவர்கள் அதில் இருந்த போதிலும் புனிதர்களதும் மறைசாட்சியர்களதும் வாழ்வாலும் தியாகங்களாலும் திரு அவை ஒரு இறை நம்பிக்கையின் மாபெரும் நிறுவனமாக வளர்ந்தது. அதேவேளை திருஅவை பிரிவினைகளையும் சீர்திருத்தங்களையும் கண்டது. இவை யாவும் நிறுவன மயமாக்கப்பட்ட திருஅவையை இன்னும் இறுக்கமான நிறுவன அமைப்பைக் கொண்ட திருஅவையாக மாற நிர்ப்பந்தித்தது. குறிப்பாக திரிதெந்து பொதுச்சங்கத்தின் எதிர் சீர்திருத்தத்தின் பின்பு.

**3) கத்தோலிக்க திருஅவையைப் பரப்பும் நோக்கோடு மறைபரப்பாளர்களால் நற்செய்திப்பணி முனைப்போடு தொடரப்பட்டமை.**

உரோமையின் வழிநடத்தலில் அல்லது மேற்பார்வையில் நாம் எல்லோரும் இலத்தீன் ஐரோப்பிய திரு அவையில் கிறிஸ்தவர்களாக ஆனோம்.

**4) திருத்தந்தை 23ஆம் அருளப்பர் - 2ம் வத்திக்கான் பொதுச்சங்கம் திருஅவை ஓர் உலகளாவிய திருஅவையாகத் திறந்தது.**

ஆயினும், எமது காலத்தில், அதிட்டவிதமாகப் பெரிதாக அறியப்படாத பேர்காமோவின் கார்டினல் ஏஞ்சலோ றோண்கல்லி என்ற 23ஆம் அருளப்பர் திருத்தந்தை முழுத் திருஅவையையும் ஒரு தீவிர சீர் திருத்தத்திற்கு அழைப்பு விடுத்தார். அவர் அப்பொதுச் சங்கத்திற்கு பெரிதும் ஊக்குவிப்பு வழங்கினார்.

1. திருஅவையின் இறுக்கமாக மூடப்பட்டிருந்த கதவுகளையும் யன்னல்களையும் உலகின் புதிதான காற்றை உள்வாக்கத் திறந்து விடுதல்.
2. ஊற்றுக்களுக்கும் திரும்புதல் (redeuntes ad fontem)
3. பயனுள்ள புதுப்பித்தல் வழி திருஅவையில் மறுமலர்ச்சியை உருவாக்குதல்

திருஅவையின் முன்னைய 20 பொதுச் சங்கங்களுடன் ஒப்பிடுகையில் 2ஆம் வத்தி. பொதுச் சங்கம் முதல் முதலாக ஒரு உலக சங்கமாக விளங்குகிறது. அதில் எல்லா நிறங்களைச் சார்ந்தவர்களும் 5 கண்டங்களிலிருந்தும் தூய ஆவியாரின் வழிநடத்துதலின் கீழ் அனைவரும் நேருக்கு நேர் சந்தித்தார்கள். பொதுச் சங்கத்தைக் கூட்டிய திருத்தந்தை 23ஆம் அருளப்பர் உலகில் எட்டுத் திசைகளிலிருந்தும் ஆயர்களை மட்டும் அழைக்கவில்லை மாறாக ஏனைய ஐரோப்பிய திருஅவையின் இறையியலாளர்களும் அழைக்கப்பட்டனர். கால் இராணர் ஈவிஸ் கொங்கா எட்வேட் இஸ்கெலபெக்ஸ் கான்ஸ் குங் போன்ற புலைமைத்துவம் வாய்ந்த இறையியலாளர்கள் இறையியல் ஆலோசகர்களாகவும் சங்கத்தின் ஏடுகளை வடிவமைத்தவர்களாகவும் விளங்கினர்.

இரையின் நதி இரைபர் நதியில் பாய்கிறது (Rhine flows into Tiber) என்ற தலைப்பில் ஒரு அமெரிக்க எழுத்தாளர் நூல் ஒன்றை எழுதினார். ஐரோப்பாவில் இருக்கும் இரையின் நதி இத்தாலியில் இருக்கும் இரைபர் நதியுடன் இணைவது என்பது ஐரோப்பிய இறையியலாளர் இத்தாலிய சிந்தனையில் செல்வாக்கைச் சித்தரிக்கிறது. அப்பொதுச் சங்கத்தில் பார்வையாளர்களாக ஏனைய கிறிஸ்தவ திருஅவைகளில் இருந்தும் பொதுநிலையினர்கள் வட்டத்தில் இருந்தும் பலர் பங்கு கொண்டார்கள்.

2ஆம் வத்திக்கான் சங்கம் அனைத்து முந்தைய சங்கங்களைப் போலல்லாமல் எந்த இறையியலாளர்களையும் கண்டனம் செய்யவில்லை. மாறாக *உலக மற்றும் மனித குலத்திற்கு திறந்தமனதோடு ஒரு புதிய பயணத்தை வகுத்தது. அதன் வழி திருஅவை மனிதனின் அடிப்படை பிரச்சினைகள், மீட்பு, குடும்பவாழ்வு, சமூகம், பண்பாடு, சமயம் போன்ற விடயங்களுக்கு திருஅவையின் மனநிலையிலும் அணுகுமுறையிலும் மீளாய்வு அல்லது மதிப்பாய்வு செய்யப் புறப்பட்டது.* இந்தச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அதன் முடிவுவரை (1962 -65) நான் அதைக் காண்பதற்குக் கொடுத்து வைத்தவன் என்று எண்ணிப் பார்ப்பதில் மகிழ்ச்சி கொள்கிறேன். கடந்த 55 ஆண்டுகளாக திரு அவையானது திருத்தந்தையர்கள் 6ம் சின்னப்பர் 2ஆம் ஜான் பவுல் பதினாறாம் பெனடிக்ற் மற்றும் தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் என்பவர்களது வழிகாட்டுதலின் கீழ் அதன் நவீன பயணத்தைச் செய்து வருகிறது. பொதுச்சங்கத்தின் வழிகாட்டுதல்களைப் பெருமளவு நடைமுறைப் படுத்துதலில் நாம் அதிகம் சாதித்துள்ளோம். ஆனால் இன்னும் நிறையச் செய்ய வேண்டியுள்ளது. கடந்த காலத்தில், அனைத்து மாற்றங்களும் பிரமிட் திருஅவைக் கட்டமைப்புக்குள்ளே உரோமை முன்னெடுப்போடு இடம் பெறுகின்றது.

**திருத்தந்தை பிரான்சிஸ்- ஓர் புரட்சிகரமான மனிதன்**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை எனது குறுகிய காலத்து அனுபவத்தில் நோக்கும் பொழுது உரோமை லத்திரன் பசிலிக்கா முன்றத்தில் உயர்ந்து நிற்கும் புனித பிரான்சிஸ் அசிசியாரின் சிலை நினைவிற்கு வருகிறது. 13ம் நூற்றாண்டு திருஅவையை மீண்டும் கட்டியெழுப்பினர் புனித பிரான்சிஸ். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களது திருத்தூது மடல்கள் “இறைவா உமக்கே புகழ்” மனிதர் அனைவரும் உடன்பிறப்புக்கள்” மற்றும் அவர் அடிக்கடி வழங்கும் உரைகளில் எழும் வீரம் பொருந்திய தொனி அவை பற்றிச் சில எதிர்ப்புக்கள் திருஅவைகுள் இருப்பினும் மூன்றாவது ஆயிரமாண்டில் வாழும் புதிய மனித குலத்தை நோக்கித் திரு அவையை முன்நோக்கிப் பயணிக்கச் செய்யும்.

திருத்தந்தை 23ஆம் அருளப்பர், 2ஆம் வத்திக்கான சங்கத்திலும் திருத்தந்தை பிரான்சிஸ் 2023ஆம் ஆண்டில் நிகழ இருக்கும் ஆயர்கள் மாமன்றத்திலும், இருவரும் ஒருமித்த துணிவுகரமான நோக்கங்களைக் கொண்டுள்ளனர். 2ம் வத்திக்கான் சங்கத்தில் திருத்தந்தை 23ஆம் அருளப்பர் திருஅவையின் கதவுகளைத் திறந்ததால் அது ஒரு புதிய உலகத் திருஅவையாக மாறியது. புதிய கோட்பாடுகளை அல்ல மாறாக உலகத்திற்கு அந்நியப்படுத்தப்பட்ட திரு அவையின் கதவுகளையும் யன்னல்களையும் திறந்து விடுவது திருஅவையில் ஏற்படுத்திய பெரும் மறுமலர்ச்சியாகும். உரோம் நகரில் 2023 ஆம் ஆண்டின் ஆயர் மாமன்றத்தின் கருப்பொருளாகத் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூட்டு ஒருமித்த திருஅவை என்னும் கருப் பொருளைத்தெரிவதால் 3வது ஆயிரமாண்டை நோக்கிய திரு அவையின் பயணம், கூட்டொருமிப்பு என்னும் பயணத்திற்கு திருஅவையைத் திறந்து விடுகிறார். இப்பயணம் திரு அவையை வெளி உலகிற்கு திறந்து விடுவது அல்ல,மாறாக திருஅவையை உட்புறமாகத் திறந்து, திருஅவையில் இருக்கும் அனைவரையும் தூய ஆவியில் ஒன்றிப்புக்கு அழைக்கிறார்.

ஒருவர் அடுத்திருப்பவருக்கு செவிமடுத்தல் அருங்கொடைகளிலும், பொறுப்புக்களிலும் பங்கேற்றுப் பகிர்ந்தளிக்க அழைக்கிறார். இவ்வுலகில் இயேசு கிறிஸ்துவின் திரு அவையாகத் திகழ ஒரு பொது திருத்தூதுரைக்கும் பணி புரியப் புறப்பட அழைக்கிறார்.

**முடிவுரை**

அனைவரும், ஒருவர் மற்றவருக்குச் செவிமடுக்கும் புதிய வெளிப்படைத் தன்மையில் புறப்படுக! இப்புதிய கூட்டு ஒருமித்த பயணம் எம் அனைவருக்கும் பல சவால்களைத் கொண்டுள்ளது. ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினருக்கு ஒருவர் மற்றவருக்குச் செவிமடுக்கும் வெளிப்படைத் தன்மை வேண்டி நிற்கிறது. இங்கு குறிப்பாக பொதுநிலையினர், தூய ஆவியால் இயக்கம் பெற்றுத் துணிவுடன் தமது எண்ணங்களை எடுத்துரைக்க அழைக்கிறது. (பொதுநிலையினருக்கு புதிய களம் அமைத்தல்.) (தொடர்ச்சி 13ம் பக்.)

# கோவிட் – 19" சூழல் இன்று இங்கு

அருட்பணி T.ரவிராஜ்

**கோ**விட் -19 என்ற பேச்சு ஆரம்பமாகித் தற்போது இரண்டுவருடங்களிற்கு மேலாகிவிட்டது. தடுப்பூசிகளை எதிர்த்து நின்று வைரஸ் தன்னைப் பல வடிவங்களில் உருமாற்றிக் கொண்டு இன்னமும் உலகினை அச்சுறுத்திய வண்ணமேயுள்ளது. வைரசினைப் போன்றே முகக் கவசங்களின் வடிவங்களும் மாறிச் செல்ல, தடுப்பூசிகளின் எண்ணிக்கையும் 1, 2, 3 ... என அதிகரித்துக் கொண்டே செல்கிறது. "Green Pass" ஒரு படி மேலேறி "Super Green Pass" ஆக மாறிவிட்டது. இழைத்துப் போன மனிதர்களுக்கு ஓர் ஊக்கியாக "Booster" தடுப்பூசி வழங்கப்படுகிறது. இந்நிலையில் உலகில் ஏனைய நாடுகளில் "வைரஸ்" பிரச்சினையென்று சொன்னால், எங்கள் நாட்டிலோ "வைரஸ்" மட்டுமல்ல பிரச்சினை.

"கோவிட் -19" சூழல் பொதுவாகவே உலகின் பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பினை உண்டு பண்ணியுள்ளது என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. இப் பொருளாதாரப் பின்னடைவு முதலாளிகளையல்ல, ஏழை உழைப்பாளிகளையே பெரிதும் பாதித்து நிற்கிறது. முதலாளித்துவ வர்க்கத் திற்கு "கோவிட்- 19" ஓர் பெரும் முதலீடு. பன்னாட்டு நிறுவனங்கள் பல "கோவிட் -19" என்ற பேசு பொருளை வியாபாரச் சித்தாந்தமாக மாற்றி விட்டன. இங்கே "அச்சம்" என்பது இன்றைய நுகர்வோர் உலகில் விதைக்கப்பட்டுள்ள வியாபார தந்திரம். "கோவிட் -19" என்ற பேசுபொருளுக்குள் நடாத்தப் படும் வியாபாரங்கள் பல கட்புலனாக வியாபாரங்கள் அவை பல்வேறு படிநிலைகளில் இடம்பெறுகின் றன. கல்வி முதல் கல்லறை வரைக்கும் நடைபெறு கின்றன. இன்று பன்னாட்டு நிறுவனங்களின் வலைப்பின்னல் பிடிக்குள்ளேயே பல நாட்டு அரசி யல் சக்கரம் சுழலுகிறது என்பது நாம் அறிந்து கொள்ள வேண்டிய விடயம்.

**அச்சம்: ஓர் கட்புலனாகா விற்பனைப் பொருள்**

"வைரஸ்" ஓர் பிரபஞ்சப் பிரச்சினையாக மாறி விட்டது. ஆனால் அதனைவிடப் பெரிய பிரச் சினை ஊடகங்கள் எமக்குள் ஊட்டி வளர்க்கும் "அச்சம்" என்னும் உளவியல் பிரச்சினை. இங்கே நாம் அறிந்து கொள்ள வேண்டிய ஒரு விடயம் என்னவென்றால்: ஒன்றைப் பற்றிய தொடர்ச்சியான பயம் அல்லது அச்சப்பாடு எம்மை ஆழமான துயர் நிலைக்குள் இழுத்துச் செல்லும் என்பதே (A continuous fear about something leads us to trauma) "வைரஸ்" மட்டில் உருவாக்கப்பட்ட "அச்சம்" சமூக இடைவெளியை ஏற்படுத்தியது. இச்சமூக இடைவெளியானது மனித உறவுகளைக் குறிப்பிடத்தக்க அளவிற்கு இன்று தூண்டாடி விட்டது. "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்" என்பது பழமொழி. ஆனால் "கோவிட் -19" சூழலில் ஒருவரது அகத்தினுள் என்ன உள்ளது என்பதையும் புரிந்து கொள்ள முடிவதில்லை, முகத்தினில் என்ன உள்ளது என்பதையும் தெரிந்துகொள்ளவும் முடியவில்லை. "அச்சம்" இன்று எம் ஒவ்வொருவரினதும் அகத்தை இருளுக்குள் இழுத்துச் சென்று முகத்தை மூடி மறைத்து விட்டது. இந்த "முகமூடி" வாழ்க்கைச் சூழலில் அடுத்திருப்பவர் அழுகிறாரா? சிரிக்கிறாரா? என்பதைக்கூட புரிந்து கொள்வது கடினமாக மாறிவிட்டது. ஏன், நாம் அழுவதும், சிரிப்பதும் சில சந்தர்ப்பங்களில் எமக்கே தெரிவதில்லை.

தனிமைப்படுத்தல் பெரும்பாலானவர்க ளுக்குப் பொதுவாக முதியவர்களுக்கு இயல்பு வாழ்க் கையாக மாற்றப்பட்டு விட்டது. வியாபாரம் விஸ்தரிக் கப்பட்டு வீடுதேடி வர ஆரம்பித்து விட்டது. "ஒன் லைன்" (Online) வாழ்வியல் வாழ்வின் ஓர் புதிய பரிமாணமாகியுள்ளது. வைரஸை யார் உருவாக்கி னார்கள்? என்ற கேள்வியை விட வைரசால் யார் அதிக இலாபமீட்டுகிறார்கள்? என்பதே இங்கு பிரதான மான கேள்வி. கோவிட்-19" சூழலில் பணக்காரர்கள் பெரும் பணக்காரர்களாகவும் ஏழைகள் அதீத ஏழைகளாகவும் மாறுகிறார்கள் என்பதே உண்மை. இந்த வியாபார உலகிற்குத் தேவைப்படுவது ஒன்றே அது எமக்குள் ஊட்டப்பட்டுள்ள "அச்சம்" - இது ஓர் கட்புலனாகா விற்பனைப் பொருள்.

**நமது நாடும் எமது நிலையும்**

இன்று ஏனைய நாடுகளில் நிதிப்பிரச்சினை யென்று சொன்னால், எமது நாட்டிலோ நிதியு டன் கூட நீதியும் ஓர் பிரச்சினைதான். எங்கள் நாட்டில் பிரச்சினைகள் எங்கள் வீட்டு அடுப்பங்கரை மட்டும் வந்து விடடது. அன்றாட வாழ்வு பெரும்பான் மையான மக்களுக்குச் சுமையாக மாறிவிட்டது. இங்கே "Gas Cylinder" மட்டுமல்ல "Cash Cylinder" உம் வீங்கி வெடிக்கிறது. பணவீக்கம் என்பது இங்கு பெரும் வீக்கம். இதனால் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்துச் செல்கிறது. அன்றாடம் உழைத்து வாழும் ஏழை எளிய மக்களின் நிலை பரிதாப நிலை. நெல் விளைந்த வயல்வெளிகளெல்லாம் புல்வளர்ந்து நிற்க, கஞ்சாச்செடி வளர்க்கும் திட்டம் பற்றிப் பேசுகின்ற இழிநிலை எம் நாட்டின் சாபக்கேடு. ஏழை விவசாயிகள் மானியத்தை எதிர்பார்த்திருக்க, எம் கடற்பரப்பில் அந்நிய நாட்டுக் கப்பல் ஒன்று மாதக்கணக்காக பாவனைக்குதவாத பசளை சுமந்து நின்றது நாம் அறிந்த உண்மை. பசளைக்கு மட்டுமல்ல, பசளை சுமந்து நின்ற கப்பலில் படியும் பாசிக் குக்கூட விலை குறிக்குமளவுக்கு மாறியது அக்கப்பல் விவகாரம். சுண்டங்காய் கால் பணம், சுமைகூலி முக் கால் பணம் என்றதாகி விட்டது எம்நாட்டு நிலை.

இலங்கை இன்று ஓர் பன்னாட்டுச் சந்தை. பல நாடுகளின் ஆதிக்கம் எம் பொருளாதாரத்தை மட்டு மல்ல, அரசியலையும் நிர்ணயிக்கிறது என்னும் நிலைப் பாடு எமது நாட்டின் துர்ப்பாக்கியம். இங்கே, ஒவ்வொரு இலங்கைக் குடிமகனும் மாபெரும் அரசியல் - பொரு ளாதார சுமைகளைச் சுமக்க வேண்டிய நிலையில் வாழ்கிறோம் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். இவற்றையெல்லாம் புரிந்து கொள்ள முடியாது எம் கண்களை மறைத்து நிற்கும் காரணிகள்: இனச் சண்டை, மதச்சண்டை, சாதிச்சண்டை இவைகளே இன்றைய பெரும்பாலானவர்களின் அரசியல் ஊன்று கோல்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்வது நன்று.



> "கிறிஸ்தவன் எந்நிலையிலும், என்ன நேர்ந்தாலும் மகிழ்வுடனே இருப்பான். எவ்விடர் வரினும் மனம் தளராது போராடுவான். திருஅவையானது மகிழ்வின் இல்லம். எனவே எந்நிலையிலும் மகிழ்வுற்றிருப்பதும், எத்துயர்வரினும் எதிர்நோக்கியிருப்பதுமே கிறிஸ்தவ வாழ்வு."

**நாங்கள் என்ன செய்ய வேண்டும்?** (லூக். 3:10)

கோவிட் -19 தொடக்க நாட்களில் இதே பாதுகாவ லன் பத்திகைக்கு "கோவிட் -19 அரசியல், பொருளா- தாரம், ஆன்மீகம்" என்னும் தலைப்பில் ஓர் கட்டுரை எழுதினேன். அதிலே கோவிட் -19 சூழலில் எமது சமூகப் பொறுப்பு (Social Responsibility) பற்றிக் கூறியிருந்தேன். அங்கே சமூக இடைவெளியைப் பேணுதல் (Social Distance) ஏனைய சுகாதார அறிவுறுத்தல்களைக் கடைப் பிடித்தல் எம் ஒவ்வொருவரினதும் சமூகப் பொறுப்பு என்று கூறியிருந்தேன். இன்று சமூக இடைவெளி பேணுதல், முகக்கவசம் அணிதல், தடுப்பூசி போடுதல் என்பவற்றுடன் இன்னுமோர் சமூகப் பொறுப்புப் பற்றிக் கூற விரும்புகி றேன்: நம்பிக்கையூட்டல்.

நம்பிக்கையூட்டல் என்பது இன்று ஓர் அவசிய மானதும், அவசரமானதுமான சமூகப் பொறுப்பு. இங்கே நாம் முதலில் "வைரஸ்" பற்றி அதிகம் பேசுவதைத் தவிர்த்துக் கொள்வது அவசியம். நாம் கூடுமிடங்களில் இயல்பான சாதாரண வாழ்வியல் விடயங்கள் பற்றிப் பேச முயலுவோம். "வைரசுடன் வாழப் பழகுதல்" என்னும் சித்தாந்தத்தில் இதுவும் ஒருநாள் கடந்துபோகும் என்ற நம்பிக்கையுடன் வாழப் பயி லுவோம். மனித உறவாடலின் அவசியத்தை நன்கு உணர்ந்து சுகாதார அறிவுறுத்தல்களைக் கைக் கொண்டு தொடர்பாடல்களை வளர்க்கும் சந்தர்ப் பங்களை ஊக்குவித்துக் கொள்வோம். சாவை எண்ணி எண்ணி ஒவ்வொரு கணமும் பயந்து மடிவதற்குப் பதிலாய் வாழ்வைப் பாதுகாப்பான முறையில் வாழ்வது பற்றிச் சிந்திப்போம்.

**கோவிட் -19 சூழலில் கிறிஸ்து பிறப்பு விழா**

கிறிஸ்து பிறப்பு நிகழ்வானது, இறைவன் மனிதனைச் சந்திக்கும் வரலாற்று நிகழ்வு. வார்த்தை மனிதனாகும் நிகழ்வு: வார்த்தை மனி தன் ஆனார் என்பது வார்த்தை வாழ்வாகியது என்ற உண்மையே. அதாவது ஒவ்வொரு மனித வாழ்வும் உலகிற்கு ஒரு செய்தி. அது ஓர் மகிழ்ச்சியின் செய்தி, நம்பிக்கையின் செய்தி. மகிழ்வூட்டும் செய்தி, நம்பிகையூட்டும் செய்தி. கிறிஸ்து பிறப்பு எவ்வாறு மகிழ்வின் செய்தியாக, நம்பிகையூட்டும் செய்தியாக அமைகிறதோ அவ் வாறே நாமும் அன்றாடம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும்மகிழ்வூட்டும்செய்தியாக, நம்பிக்கை யூட்டும் செய்தியாக மாறவேண்டும்.

உண்மைக்கிறிஸ்தவன் எந்நிலையிலும், என்ன நேர்ந்தாலும் மகிழ்வுடனே இருப்பான். எவ்விடர் வரினும் மனம் தளராது போராடுவான். திருஅவையானது மகிழ்வின் இல்லம். எனவே எந்நிலையிலும் மகிழ்வுற்றிருப்பதும், எத்துயர் வரினும் எதிர்நோக்கியிருப்பதுமே கிறிஸ்தவ வாழ்வு.

> **"எதிர்நோக்கி இருப்பதில் மகிழ்ச்சி கொள்ளுங்கள்; துன்பத்திலும் தளரா மனத்துடன் இருங்கள்; இறைவேண்டலில் நிலைத்திருங்கள்: வறுமையுற்ற மக்களோடு உங்களிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளுங்கள். விருந்தோம்பலில் கருத்தாயிருங்கள்".** (உரோ 12:12)

அச்சம் எங்கள் இயல்பான செயற்பாடு களை முடங்கச் செய்து விடுகிறது. மாறாக நம்பிக்கை வரண்டுபோகும் எங்கள் வாழ்வினை நீரூற்றிப் பசுமையாக்குகிறது; பாலை நிலத்திலும் நீர் நிலைகளைத் தேடிச் செல்லத் தூண்டுகிறது; பள்ளத்தாக்கில் வீழ்ந்து கிடப்பினும் எம்மை மேல்நோக்கிப் பார்க்கத் தூண்டுகிறது. மரணப் படுக்கையிலும் வாழ்வின் அழகான பக்கங்களைப் புரட்டிக்காட்டி மகிழ்வூட்டுகிறது. மகிழ்வின் நிகழ் வாகிய கிறிஸ்து பிறப்புக் கொண்டாடப்பட வேண் டிய ஒன்று. அது மனமுடைந்து காரிருளில் வாழும் மனிதர் ஒவ்வொருவருக்கும் பேரொளியாக மாறி நம்பிக்கையூட்டும் கொண்டாட்டமாகும். எனவே, தடைகள் ஏற்படினும் திருவழிபாடுகள் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டு அவற்றில் மக்கள் பங்கெடுப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதும் பொறுப்பானவர்களின் சமூக, ஆன் மீகப் பொறுப்பாகும். அதேவேளை, உல- கின் பொருளாதாரச் சிக்கல்களை நம் சிந்தையில் கொண்டு பண்டிகைக் கொண்டாட்ட நிகழ்வுகளை மட்டுப்படுத்தி, அநாவசியமான செலவீனங்களைத் தவிர்த்துக் கொள்வதும் இக்காலகட்டத்தில் மக்க ளின் பாரிய சமூகப் பொறுப்புணர்வுமாகும். இன்று சிக்கனமான வாழ்வு என்பது காலத்தின் கட்டாய தேவை என்பதை எங்களில் பலர் இன்னமும் புரிந்துகொள்ளவில்லை. எங்கள் தேவை அறிந்து செலவு செய்யவேண்டிய அவசர தேவை ஒன்று உருவாகிவிட்டது என்பது இன்று எம் ஒவ்வொருவருக்கும் காலம் கற்றுக்கொடுக்கும் பாடம். தன்னையும் பிறரையும் நேசிக்கும் நல்ல கிறிஸ்தவன் காலத்தின் தேவை உணர்ந்து தன் வாழ்வில் இதை நடைமுறைப்படுத்துவான்.

# வளனார் பப்பாவின் பதில்கள்



*டேவிட் - யாழ்*

**கேள்வி: இப்போதுள்ள மாணவர்களுக்குப் பாடசாலை நாட்களை விட, லீவு நாட்களே அதிகமாக உள்ளதே? நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?**

**பதில்:** அதை 'பாடசாலை' என்பதை விட 'லீவுசாலை' என்பதே பொருத்தம் என நான் நினைக்கிறேன். ஏனெனில் தற்போது வீட்டில் தான் ஆசிரியரும் மாணவரும் அதிக நேரம் கற்றல் - கற்பித்தல் (online) செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

*அமலி - அரியாலை*

**கே:**கொரோனா வைரசுக்கு எந்தத் தடுப்பூசி சிறந்தது? பைசரா? சைநோபாமா? புட்னிக்கா? அஸ்ராசெனிக்காவா?

**ப:** எது தடுப்பூசியோ அதுவே சிறந்தது!!

*அருண்குமார் - சாவகச்சேரி*

**கே:** எமது பங்குத் திருஅவையில் பற்பல பிரிவினைகளும் மன்னிக்க முடியா மனநிலைகளும் உள்ள இக்காலகட்டத்தில் வரவிருக்கும் கூட்டொருங்கியக்க மாநாடு இதற்கொரு முற்றுப்புள்ளி வைக்குமா?

**ப:** உண்மையில் ஒன்றிப்பு - பங்கேற்பு - பணி என்னும் இலக்கைக் கருப்பொருளாகக் கொண்ட இக் கூட்டொருங்கியக்க மாநாடே, பங்குத் திரு அவையில் மேற்சொன்ன நோய்க்குரிய சரியான நிவாரணி! மருந்து நன்றே. ஆனால் நோயாளி சரியாக அதை உட்கொள்ளவேண்டுமே. அதற்கு ஆவன செய்வதே எமது பணி.

*அன்ரனி - முல்லைத்தீவு*

**கே:** பப்பா! 'குடும்பக் கஸ்ரம் நீங்க இதோ வங்கிக் கடன்!' என விளம்பரம் பார்த்தேன். கடன் வாங்கலாமா?

**ப:** பின்னர் வாங்கிய வங்கிக் கடன் நீக்க, குடும்பத்தில் கஸ்ரமாக இருக்குமே! அது பரவாயில்லையா? 'கடன் பட்டார் நெஞ்சம்போல கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற இராமாயணக் காலம் மீண்டும் திரும்பியுள்ளது. அதிகம் கடன் படாதீர்கள். பின் இந்தியா சீனா என்று அலையவேண்டி வரும். கடன் அன்பை முறிக்கும். சிலவேளை எலும்பையும் முறிக்கும். (தேனீர்க் கடை பலகை சொன்னது)

*கஜன்குமார் - மட்டுவில்*

**கே:** பப்பா! நீங்கள் நத்தாருக்கு வீட்டிற்கு வந்தால் சாப்பிட்டுத் தான் போகவேண்டும். உங்களுக்குத் தக்காளிச் சொதி வைக்கவா? ஆப்பிள் சொதி வைக்கவா?

**ப:** உம் கேள்வி எனக்குப் புரிகிறது! தக்காளி இப்போ 'கரட்' ஆகிவிட்டதாம். (24கரட்) அது தானே. நீர் அவற்றை முதலில் மண்ணெண்ணை அடுப்பில் வைக்கவா? Gas அடுப்பில் வைக்கவா? விறகு அடுப்பில் வைக்கவா என்று தான் கேட்டிருக்க வேண்டும். சாப்பிடுவதற்கு முதலில் உசிர் முக்கியம் அமைச்சரே!!

*கார்த்திக் - உரும்பிராய்*

**கே:** வளனாரே! 'ஒமிக்குரோன்' இலங்கைக்கு எதனால் வரும் என்று நீர் எதிர்பார்க்கிறீர்? வந்தால் அதற்கும் PCR செய்யவேண்டுமா?

**ப:** அனேகமாக எயாப்போட்டில் Arrival (வருகை) பகுதியால் தான் வரும் என நினைக்கிறேன். அதற்கெல்லாம் PCR செய்யமுடியாது. செய்தால் கொரோனா கோவிச்சுக்கொள்ளுமாம். இனி கோவிட் - 19 முடிஞ்சுது 'ஒமிக்குரோன் - 21' என வரப்போகுது. இது கடைசில எங்கபோய் முடியப்போகுதோ தெரியலப்பா!

*றூபன் - உடுவில்*

**கே:** Online Class மாணவருக்குப் பயனுள்ளதா? பயனற்றதா? எனக்கோ அது பயனற்றது போலத் தெரிகிறது. உமது கருத்து என்ன?

**ப:** Online Class ஐச் சொல்லிக் குற்றமில்லை! மேலை நாடுகளில் இவை சர்வ சாதாரணம். தொழில் நுட்ப உலகில் நமது மாணவர்களும் இவ்வகைக் கற்ற லுக்கு மாறுதல் நல்லதே. இதில் சில குறைபாடுகள் இருக்கத் தான் செய்கின்றன. ஆனால் பல நன்மைகள் உண்டு. (பல வீடுகளில் Line தான் On இல் இருக்கின்றது. மாணவர்கள் Off ! (வேறுவேலை)

*திலக் - நவாலி*

**கே:** பப்பா! பூஸ்டர் ஊசி போடச் சொல்கிறார்கள். போட்டவர்கள் படும்பாட்டைப் பார்க்கப் பயமாக உள்ளதே? நீர் என்ன நினைக்கிறீர்கள்?

**ப:** 2019ல் ஈஸ்ரர் தாக்குதல். 2020ல் பாஸ்ரர் தாக்குதல். 2021ல் பூஸ்டர் தாக்குதல் என்பது இதுதானோ?

*மதன் - முழங்காவில்*

**கே:** மண் கல் ஏற்றும் டிப்பர் லொறிகள் பாதசாரிகள் முதல் - புகையிரதம் வரை எல்லாவற்றையும் அடித்து நொறுக்குகின்றனவே. அந்த டிப்பர்களுக்குத் தடைபோட்டால் என்ன?

**ப:** போர்க் காலத்தில் போன உயிர்களுக்கு இணையாகத் தற்போது விபத்துக்களில் தினம் தினம் உயிர்கள் பறி போவது பாரிய பிரச்சினையாக எழுந்துள்ளது. நமது வீதிகள் காப்பெற் வீதிகளாக மாறியுள்ளதால் கண் மண் தெரியாத வேகம் - அதனால் விபத்துக்கள்! டிப்பர் போன்ற பார ஊர்திகளால் விபத்துக்கள் அடிக்கடி நிகழ்வது உண்மைதான். அதே நேரம் அந்தக் காப்பெற் வீதிகள் அமைக்கக் காரணமாக இருந்ததும் இந்த டிப்பர்கள் தானே! எனவே வேகக்கட்டுப்பாட்டு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவோம். விபத்துக்களைத் தவிர்ப்போம்.

*றெக்ஸ்- அளம்பில்*

**கே:** ஏதோ ஒரு நாட்டில் தற்கொலை செய்துகொள்ள இயந்திரம் ஒன்று கண்டுபிடித்துள்ளார்களாமே. ஏன் இந்தக் கொலைவெறி?

**ப:** இது சுவிஸ்லாந்து நாட்டில் ஒரு மருத்துவர் கண்டுபிடித்த இயந்திரம். இதன் பெயர் 'சார்கோ போட்' சவப்பெட்டி வடிவிலானது. இறக்க விரும்புபவர் அதற்குள் சென்று பட்டனை on செய்தால் போதுமானது. (off செய்ய அவர் இருக்கமாட்டார்) இது கிறிஸ்தவ போதனைக்கு முற்றிலும் எதிரானது. துன்பங்களை இறுதிவரை அனுபவிப்பது என்பது இயேசுவின் பாடுகளில் பங்கெடுப்பதாகும். அதனால் தான் கொலை வெறியும் பாவம் தற்கொலை வெறியும் பாவம் என்று திருஅவை கற்பிக்கிறது. ஆகவே தான் மக்களே! குறிப்பாக இளையோரே! தவறான முடிவுகளுக்குச் செல்லாதீர்கள். போராடி வாழுங்கள்.

*விமல்ராஜ் - குருநகர்*

**கே:** எமது நாட்டில் பல ஆண்டுகளாகக் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றுவந்தன. தற்போது எரிவாயு சிலிண்டர்கள் வெடிக்கின்றனவே. இரண்டு வெடிப்புக்களுக்கும் ஏதேனும் தொடர்பு உண்டோ பப்பா?

**ப:**இரண்டிற்கும் ஒரே காரணம் தான் சொல்ல முடியும். அரசியல்! அரசியல்!!
( இல்லத்தரசிகளின் இதயக் குமுறலாயும் இருக்குமோ? )

*சர்மிலா - சுன்னாகம்*

**கே:** ஈஸ்டர் தாக்குதல் நடந்து சில ஆண்டுகள் கடந்தும் அரசும் கருதினாலும் மாறி மாறித் தாக்குகிறார்களே. இவர்களின் தாக்குதல் எப்போ முடியும்?

**ப:**இது காலம் கடந்த தாக்குதல்! எனினும் தெய்வநீதி நின்று கொல்லும் என்பார்களே. இனியாவதுஇ எல்லா மனிதர்க்கும் 'இரத்தத்தின் நிறம் சிவப்பே' என்று புரிந்தால் சரி.

*நிர்மல் - நெடுந்தீவு*

**கே:** ஒரு கடிஜோக் சொல்லுங்களேன்?

**ப:** தந்தை: Vacancy எண்டு பேப்பர் பாத்து வேலை தேடிப்போனியே. ஏன் திரும்பி வந்துவிட்டாய்? என்ன ஆச்சு?
மகன்: எனக்கு அந்த வேலை பிடிக்கலப்பா.
தந்தை: அப்படி என்ன வேலை?
மகன்: இனி வரப்போற வைரசுக்கு பெயர் வைக்கிற வேலையாம் பா!? (கிகிகி)



அருட்பணி. எஸ்.ஏ.அருட்செல்வன்

## "நீதியில் ஊன்றிய அமைதியாய்...."

"நீதியை நிலைநாட்டுங்கள்
நேர்மையைக் கடைப்பிடியுங்கள்
நான் வழங்கும் விடுதலை
அண்மையில் உள்ளது" (எசாயா:56:1)

ஆகமனகாலம் அகங்களை மாற்றும்
அமைதித் தேவனின் உதய காலம்
ஆதியின் வார்த்தையானவர் ஜோதியாய்
அமல மரியிடம் மனுவானகாலம்

எதிர்பார்த்த வாக்குறுதியின் மைந்தனே
நேர்மைமிகு தாவீது குலத்தளிரே
காரிருளில் வாழ்வோரின் பேரொளியே
பாரின் நீதிச்சுடராய் வாராயோ

அகிலத்திலே அணைகடந்த அவலங்களையும்
அடுக்குத் தொடராகும் கொரோனா பிறழ்வுகளையும்
திடுக்குற வைக்கும் சமூகச் சீர்கேட்டையும்
தடுத்திடும் வலிமைமிகு மன்னனாய் வாராயோ

திக்கெட்டிலும் எகிறிடும் பொருளாதாரச் சிக்கலில்
விக்கித் தவிக்கிறதே ஏழையர் குலம்
ஏதிலிகள் கண்ணீரில் கூட உப்பில்லை
ஏற்றமளிக்கும் வியத்தகு மீட்பராய் வாராயோ

அமைதி வழிக்கே புதைகுழி வெட்டும் புவியரசர்
அவலமாய்த் தவிக்கும் உரிமையற்றோர்
அன்பைப் பகிரமறுக்கும் குடும்பநிலைகள்
அந்தரிக்கின்றோம் அமளியுற்ற போர்க்களத்தில்

துயரத்தின் ஆடையைக் களைந்து
மாட்சியின் ஆடையை அருளும்
ஆட்சிப் பொறுப்பின் ஆண்மகவே
நீதியில் ஊன்றிய அமைதியாய்
நித்திலத்தின் விடியலாய் வாராயோ

செல்வி. S.M.புளோறன்ஸ்

## இளையோர் காவியம்

பாலன் பிறப்பு வாழ்க்கைக் கதவின்
திறப்பு

நீ புத்தாண்டில் பயன்படுத்து
ஒரு நொடிப்பொழுதைக் கூட
பத்து ஆண்டுகளில் சாதிப்பதை
புத்தாண்டில் சாதிப்போம்

மனிதருக்கு ஒரு புதுப்பார்வை
பொருத்துகிறான் கவிப் பேரரசு வைரமுத்து

இனி உம் இலட்சியப் பாதை
அதிவேக நெடும் சாலை
வேகம் மட்டுமல்ல
உரிய இடத்தில் சேர்ப்பது

விழிப்பு
நீ கைவிடாமல் நிற்க
கைவிடும் அளவுக்கு அவஸ்தை

எப்பவும் மூழ்காது துன்பங்களை
துணிவுக் கப்பலில் ஏற்று
உன் முதுகில்
நெருப்பின் சிறகுகளைப் பூட்டு

நீ வீழ்ந்தவரை மட்டுமல்ல
வீழ்த்தப்பட்டவரையும்
தூக்கிக்கொண்டு எழும்பு

நீ மீட்பாய் என்று காத்துக்கொண்டிருக்கிறது
முடக்கப்பட்ட மனிதம்
உன் வியர்வை நரம்பு
உலகத்தினுடைய சுவாசம்
(தொடரும்...)

உயிரோவியன்

# கிறிஸ்துவை சந்திப்போமா?

**சிதறிய பவனி**

வட அமெரிக்காவில் ஒரு மாநிலமான வெஸ்கொன்சனில் சில வாரங்களுக்கு முன்னர் ஒரு கிறிஸ்மஸ் பவனி (Parade) நடைபெற்றது. இப்படிப்பட்ட பவனி களில் பொதுவாக பாண்ட் (bant) (தமிழில் சொல்வதனால் மேளம்) அடித்து, இசைக் கருவிகளின் மூலம் இசைத்து, வண்ண வண்ண உடைகள் அணிந்து ஆண்களும், பெண்களும் பவனி வருவார்கள். இதைக் கண்டு களிக்கவும் தெருவோர மாக இரு மருங்கும் மக்கள் வரிசை யாக நின்று ஆர்ப்பரித்து மகிழ்ந்து பவனி வருவோரை உற்சாகப்படுத்து வார்கள். இது பார்ப்பதற்கு ஒரு கண் கொள்ளாக் காட்சிதான். இதை இம்முறை கிறிஸ்மஸ் பவனி என்று அவர்கள் அழைத்தாலும் கிறிஸ்மஸ்சிற்கும் இந்தப் பவனிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

இந்தப் பவனியைக் குறி வைத்து மிக வேகமாக வாகன மொன்றில் பயணித்த ஒருவர் இந் தப் பவனிக்குள்ளேயே தனது வாகனத்தைச் செலுத்திப் பல சிறார்களைக் கொன்றதுமல்லா மல் இன்னும் பலரைக் காயப்படுத் யுள்ளார். வட அமெரிக்காவில் இது ஒரு விதி விலக்கான செயல் அல்ல

**விடுதலைக் காலம்**

பல வருடங்களாக, வட அமெரிக்க மக்கள் இயேசு பிறந்த நாளை கிறிஸ்மஸ் என்றழைப்பதை நிறுத்திவிட்டார்கள். பதிலாக விடுதலைக் காலம் என்று இக் காலத்தை அழைக்க ஆரம்பித் தார்கள். இப்படிப்பட்ட "நோய்" கள் வட அமெரிக்காவில் துவங்கும் பொழுது. அது ஐரோப்பிய நாடுகளை தொற்றிவிடும்.

விடுதலைக் காலம் என்று இக்காலத்தை அவர்கள் அழைத்தாலும், விடுதலை வாழ்த் அட்டை, விடுதலைக் கேக், விடு தலை மரம் (Christmas Tree ) விடுதலைப் பரிசில்கள், விடுதலை வணிகம் போன்றவற்றை நிறுத்தி விட வில்லை. இதில் உள்ள ஒரு பாரிய முரண்பாட்டை அல்லது மடைமைத்தனத்தை அவர்கள் புரிந்து கொண்டதாகத் தெரிய வில்லை! தெரிய விரும்பியவர்களை இந்த விடுதலைக் காலம், படிப்படி யாக ஒரு தறுதலைக் காலமாக மாறி வருவதை ஐரோப்பிய நாடுகள் பார்க்க வில்லையா? பார்க்க விரும்ப வில்லையா?

**மத விழுமியங்கள்**

மதமற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க முனைந்தவர்கள், மத விழுமியங்களையும் விட்டு விட்டார்கள். படிப்படியாக மனித விழுமியங்களையும் மறந்துவிட்டார் கள். காசே தான் கடவுளடா என்ற கொள்கை பரவியது. பரவுகிறது இந்தக் காசு ஆசைக்கு எல்லை யில்லை.அரசியல் வாதிகளும் சரி மத குருக்களும் சரி இதற்குள் சிக்கிக் கொண்டார்கள். அதனால் மனித விழுமியங்கள் அற்றவர்களாகவே இவர்கள் மாறிவிட்டார்கள். அரசிய லில் உள்ளவர்கள் பெரிய களவுக- ளில் ஈடுபடுகிறார்கள். மக்களுக்குப் பொய் சொல்லுகிறார்கள். அதே வேளை மனித உரிமைகள் பற்றிப் பேசுகிறார்கள். இவர்களுடைய இரட்டை வேடத்தை மக்கள் படிப்படியாக அறிந்து வருகிறார்கள். இளைஞர்கள் இவர்களைப் பார்த்து 'இப்படித்தான் வாழ லாம்: வாழ வேண்டுமென்று' முடிவு செய்கிறார்கள். அடுத்த தலைமுறைக்கு வழிகாட்டுவது யார்? வேலிகளே பயிர் களை மேய்கின்றனவா? மேய இந்த சமுதாயம் விடுகின்றதா?

**நடைமுறை நாத்தீகர்**

பலர் எதாவது ஒரு மதத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, கடவுளில் தங்க ளுக்கு நம்பிக்கை உண்டென்று அறிக்கை இடுவார்கள். ஆனால் நடைமுறையில் அன்றாட வாழ்வில், திட்டமிடலில் அந்தக் கடவுளை முற்றாகவே மறந்து விடுகிறார்கள். இந்தப் பட்டியலிலும் அரசியல்வாதிகள் மதவாதிகள் நிறை



யவே இருக்கிறார்கள். அடுத்த தலை முறையினரின் வாழ்க்கை வளர்ச்சிக்கு இவர்கள் இடறலாகவே இருக்கிறார்கள். இளம் தலைமுறை மதத்தில் ஈடுபடா மைக்கு இதுவும் ஒரு காரணம்.உலக ளாவிய ரீதியில் பார்க்கும் பொழுது, தலைமைத்துவம் இல்லாத தலைவர் களையும் பொறுப்பற்ற முகாமையாளர் களையும் நிறைய அவதானிக்கக் கூடிய- தாக இருக்கின்றது.

**விதி விலக்கு**

நியூசிலாந்துப் பிரதமரையும், வட அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை யும் வத்திக்கானில் உள்ள திருத்தந்தை பிரான்சிஸ் போன்றவர்களையும், நல்ல தலைவர்களாக நேர்மையுள்ளவர்களாக, சொல்வதை செய்பவர்களாக, மக்களு டைய வாழ்வில் அக்கறை கொண்டவர் களாக பலர் கணிப்பதையும் பார்க்க நான் தவறவில்லை.

இப்படிப்பட்ட ஒரு பின்னணி யிலேயே நாம் இயேசு பிறந்த நாளைக் கொண்டாடுகின்றோம். இந்தக் கொண் டாட்டமும் புறச் சடங்குகளிலும் புற ஆராத னைகளிலும் தான் கிறிஸ்து பிறப்பு விழா முடியுமா? இதுவும் ஒரு வகையில் நடை முறை நாத்தீகமா? ஒவ்வொரு வரும் கேட்க வேண்டிய கேள்வி வாசகர்களும் இந்தக் கட்டுரையாளரும் தம்மைத் தாமே கேட்க வேண்டிய கேள்வி

**மதங்கள் தேவையா**

மதங்கள் தங்கள் தங்கள் உயரிய விழுமியங்களை மக்கள் வாழவும், மதங் களின் வழி நின்று ஓர் ஆழமான ஆன் மீகப் பயணத்தில் மக்களை அழைத்துச் செல்லுமானால், ஆம் மதங்கள் தேவை. மதங்களே அந்த உயரிய விழுமியங் களை வாழாமல், மதங்களிடையே வெறுப்பையும் ஒரு காழ்ப்புணர்ச் சியை யும் மக்களுக்கு ஊட்டுமானால், அந்த மதங்கள் கடுமையாக விமர்சிக்கப்படல் வேண்டும். இயேசு இதையே தனது காலத்தில் செய்தார். இதற்கு நற்செய்தி ஏடுகள் சான்று.

மதங்கள் புறத்தில் மட்டும் ஆரா தனைகளையும், வழிபாடுகளையும் கொண்டாட்டங்களையும், சட்டங்களை யும் சடங்குகளையும் சம்பிரதாயங்களை யும் குறிக்கோளாக்கிக் கொள்ளுமா னால் அந்த மதங்களும் விமர்சனத்துக் குள்ளாக்கப்பட வேண்டும். இதற்கும் இயேசுவின் நற்செய்திகள் சான்று. மதங்கள் என்றுமே புதுப்பிக்கப்பட வேண் டும். அதுவும் மனிதர்களினால் ஆளப் படும் மதங்கள் என்றுமே புதுப்பிக்கப் பட வேண்டும். இதையே இரண்டா வது வத்திக்கான் சங்கம் செய்ய முன்

**கரவையூர்ச் செல்வம்**

னெடுத்து. இன்று இதையே திருத்தந்தை பிரான்சிஸ் செய்யமுற்படுகின்றார். இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு எப்பொழு துமே தடைகளைக் கொண்டு வருப வர்கள் இருக்கிறார்கள். மாற்றங்களை விரும்பாதவர்கள், புதுமையை வர வேற்காதவர்கள் அர்த்தமுடன் வாழ முனையாதவர்கள் பழமையில் ஊறி, தங்கள் பதவிகளையும் ஆடம்பரமான வாழ்க்கையையும் தக்க வைப்போர் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டையாவார்கள்.

**கலாசாரங்களின் சந்திப்பு**

வட அமெரிக்காவின் அரசியல் தலை நகரமாக வாஷிங்டன் நகரில் உலகப் பிரசித்த பெற்ற ஒரு பல்கலைக் கழகம் உண்டு. ஜோர்ஜ் ரவுன் பல் கலைக்கழகம் என்றழைக்கப்படும் இந்தப் பல்கலைக்கழகம் இயேசு சபையினரால் நடாத்தப்படுகின்றது. இந்தப் பல்கலைக் கழகத்தில் அண்மையில் ஒரு புது முயற்சி ஆரம்பிக்கப்பட்டது. இந்த முயற்சிக்குப் பெயர் "கலாசாரங்களின் சந்திப்பு" இந்தக் கலாசாரமென்ற சொல் மதங்களையும் உள்வாங்குகின்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்துக்குப் பின்னர் சில நாடுகளில் "மதங்களிடையே ஓர் உரையாடல்" என்ற பெயரில் உரையாடல்கள் இடம் பெற்றன. முன்னைய திருத்தந்தை யோண் போல் அவர்களுடைய தலைமையில் இத்தாலியிலுள்ள அசிசி நகரத்தில் அனைத்து மதத் தலைவர்கள் கூடினார்கள். அதிசயம் என்றார்கள். வரலாறு காணாத வகையில் மதத் தலைவர்கள் ஒன்று கூடினார்கள். ஆனால் தொடரவில்லை மத அறிஞர்கள் உரையாடலை நடத்திய பொழுது, அந்த உரையாடல் அறிவு ரீதியாகவே நடைபெற்று வந்தது. ஆகவே இதுவரை இப்படிப்பட்ட முயற்சிகளால் மதங்களிடையே ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

**உரையாடல் சந்திப்பு**

உரையாடலுக்கும் சந்திப்பிற்கும் வேறுபாடுண்டு. இதுவரை நடை பெற்ற உரையாடல்கள் அறிஞர்க ளிடையே அறிவு ரீதியாகப் பகிரப்பட்ட கருத்துக்கள் அதற்கப்பால் அவை சென்றதாகத் தெரியவில்லை ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவ வில்லை.

சந்திப்பு என்ற சொல் வேறு கருத்துக் கொண்டது. Encounter என்ற ஆங்கிலச் சொல்லையே நான் சந்திப்பு என்று மொழிபெயர்த்துள் ளேன். சந்திப்பில் உரையாடல் உண்டு. தன்னுணர்வு உண்டு. இப்படிப்பட்ட சந்திப்புகளில் கிறிஸ் துவை சந்திக் கலாம் (Encounter Christ) ஒத்துணர்வுடன் உண்மை யைத் தேடி மக்கள் சந்திக்கும் பொழுது. அந்த நேர்மையான சந்திப்பில் திறந்த மனம் கொண்ட சந்திப்பில் கிறிஸ்துவைச் சந்திக்க லாம்.இந்த முயற்சியை கேள்விப் பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் சம்பந்தப்பட்டவர்களைப் பாராட்டி புதுப்பயணத்தைத் தொடர ஆசி வழங்கி உற்சாகப்படுத்தினார்.

**எழும் வினாக்கள்**

இந்தக் கலாசார சந்திப்புகளும் அறிஞர் மட்டில் ஓர் உரையாடலா கவே மாறுமா? அன்றேல் மக்களின் அனைத்து மட்டங்களிலும் இந்தச் சந்திப்பு நேர்மையுடன் திறந்த மனத்துடன் உண்மையைத் தேடும் ஓர் மனப் பான்மையுடன் இடம் பெறுமா?படிப்படியாக இப்படியான சந்திப் புக்கள் நடைபெறுமாயின், உலகளாவிய கிறிஸ்துவை மக்கள் மதங்களை மேவிய நிலையில் சந்திப்பார்கள். பாகுபாடுகளும் பிரிவினைகளும், இன, மத, சாதி, நாட்டு துவேஷங்கள் வளர்ந்து வரும் உலகில், ஒரு புதிய திசையில், வாழ்வளிக்க கூடிய திசையில் அனைவரும் பயணிக்க லாம். பயணிக்க வேண்டும். இந்த அழைப்பு ஓர் அவசரமான- தும், அவசியமாயதும் என்பது இக் கட்டுரையாளரின் கணிப்பு.

ஒரு பக்கத்தில் மதவெறி யையும், இன வெறியையும், சாதி வெறியையும், மொழி வெறியையும் நாட்டு வெறியையும் வளர்த்து வரும் அரசியல்வாதிகளும், மதவாதிகளும் மறுபக்கத்தில் மனிதத்தை இழந்து மனித மதிப்பீடுகளை இழந்து, களவுகளையும், கொலைகளையும், வாள்வெட்டுக்களையும், போர்களை யும், பயங்கரவாதங்களையும் (அரச பயங்கரவாதமும் இன, மத, மொழி, சாதி, நாடு என்ற பயங்கரவாதமும்) மனுக்குலத்தை அழிக்கவல்ல, ஆயுத உற்பத்தியை யும் அவற்றை ஏற்றுமதி செய்யும் கொடிய வணிகத்தையும் உலகம் வளர்த்து வருவது ஒரு யதார்த்தம். இவை தடுத்து நிறுத்தப்பட வேண்டும். அதனாலேயே மேற்கூறிய சந்திப்புக்களை வளர்ப்பது அவசியம்.

கிறிஸ்து இல்லாத கிறிஸ்மஸ்
சாறில்லாத சக்கை;
உயிரற்ற உடல்.



## தமிழ் மக்களின் இன்னல்கள் நீக்கிட எழுந்தருள்வாய்

ஆலோசனைக் கர்த்தரே! சமாதானப் பிரபுவே
2021 இலும் மீண்டும் உம் திருப்பிறப்பு ஆண்டு
மனுக்குலத்தின் பாவமகற்ற, உம் திரு இரத்தம் சிந்தி
மரித்துயிர்த்து வெற்றி வீரனாக திவ்விய நற்கருணையில்
இருப்பவரே வாழ்க

கொவிட் -19 என்ற கொள்ளை நோயானது, மூர்க்கமாக
கோரமாகத் தாண்டவம் ஆடியே - பு துப்புது நோயாக
மக்ரோன் எனும் புதிய பெயரைச் சுமந்து விரிவடைந்து
உலகம் முழுதையுமே பெரும் அச்சத்திலுறைய
வைத்துள்ளதே

இந்த ஆண்டு முழுவதும் கோடிக்கணக்கான மக்களை
வாட்டியே உயிர்களைப் பறித்தும், உறுப்புகளைச்
சிதைத்தும்
நோய்களால் வாட்டியே வேகமாகப் பரவிய போதிலுமே
இறையச்சமின்றி வாழும் மாந்தரோ அநேகராயுள்ளனரே!

தூய கன்னித்தாயின் உதரத்தில் தூய்மையிலும்
தூய்மையாக ஏழ்மையாக உதித்த பரம்பொருளே
நீர் மிகமிக வெறுத்திடும் காமம் கற்புக்கெதிரானவை
பாலியல் துஷ்பிரயோகங்கள், உலகனைத்தும் விஷ
மாய்ப்பரவ
இறைதந்தையின் சினமும் மூண்டெழுகின்றதே பாலா

திருத்தந்தையின் செயற்பாடுகள் உலகளாவிய ஆயர் மன்றம்
யாழ் ஆயர் தலைமையிலும் நடைபெற்று பின்பு
பங்குகளிலும் பங்குத் தந்தையர்களின் வழிகாட்டலிலும்
செயற்பாடுகள் எல்லாம் மக்கள் இதயங்களில் மலர்ந்திட
அருள்புரிவாய்

காணாமற் போனோரின் உறவுகளின் கண்ணீர் வெள்ளம்
காலங்காலமாய் நீடித்து வருகின்றதே ஐயா
அரசுகளின் ஆணவம் உண்மையற்ற தன்மைகள்
அட்டூழியங்கள் நீங்கி நீதி நேர்மை தழைத்திட விரைவாய்
பாலா

சொந்த இடங்களின் நில அபகரிப்பு நீங்க
நாட்டில் நடைபெறும் ஊழல்கள் பதுக்கல்கள் நீங்க
தன் மானம் தழைக்க கொள்ளை நோய் அகல
நற்பண்புகள் மலர்ந்திட உம் ஆட்சி ஓங்கிட
கன்னிமரி பாலனே உதித்திடுவாய்

தமிழ் மக்களின் இன்னல்கள் போக்கிடவே
அவர்களும் நிம்மதியாய் வாழ்ந்திட எமது தமிழ் ஆயர்கள்
எடுக்கும் அரும்பெரும் முயற்சிகளெல்லாம்
வெற்றி பெற்றிடவே வெற்றியின் வேந்தனாம் பாலனே
எழுந்தருள்வாய் எழுந்தருள்வாய்!!

**திருமதி எம்.செபஸ்தியாம்பிள்ளை**
**உடுவில்**



## மனிதம் மலர்ந்திட மண்ணில் பிறப்பாயோ?

உணர்வற்றுப் போன மனிதமனம்
தெருவோரம் அலைகிறது இங்கு
அரவணைக்க யாருமில்லை
ஆதலால் நீ வந்து பிறந்து விடு

உண்மைகளை உரத்துச்
சொல்ல முடியவில்லையே தினமும்
ஊமைகளாகிப் போகுதே மனங்கள்
அவற்றை மாற்ற நீ வந்து பிறந்து விடு

ஆணிகள் அடித்துச் சிலுவையில் அறைய
யூதர்கள் தேவையில்லை இங்கு
யூதாசும் கூடவே தான்
ஆதலால் விடுவிக்க வந்து பிறந்துவிடு

மாற்றங்களைக் காணவிழைகின்றோம்
மனங்களை மாற்ற முடியவில்லை
மீட்சி இன்றித் தவிக்கின்றோம் தினமும்
எம்மை மீட்க மீட்பராக வந்து பிறந்துவிடு

மனிதநேயம் மண்ணில் மலர
துயருறும் உறவுகள் துயர் துடைக்க
குரல்கேட்டுச் செவிமடுக்க நாம்
குழந்தையாக மனங்களில் வந்து பிறந்து
விடு

யாரையும் வெறுக்காத இதயத்துடன்
புண்படுத்தாத வார்த்தைகளைச்
சொல்லிவிடவும்
புன்னகை புரிந்தபடி உதவிக்கரம்
கொடுத்திட
மனிதனில் மனிதம் மலர மண்ணில்
பிறந்திடுவாயோ?

**சேரருபன் அருள்மதி**
**மல்வம்**



## எம் அவலக்குரல் கேட்கலையோ!

பிறக்கும் பாலகனே
எம் அவலக்குரல் கேட்கலையோ!
எம் தேசம் முழுவதும் சவத்
துணிகளின் மணங்கள்
உறவுகளை நேரில் காணக்கூட
முடியாத நிலை
தேசம் எங்கும் அழுகுரல்கள்
சிரிப்பை மறந்து அழுத முகங்களாய் எம் மக்கள்
கொடிய நோயின் தீவிரம் படிப்படியாக வளர்ந்து
உயிரைக் காவு கொள்கின்றது

தனிமைப் படுத்தல்கள் உச்சம் அடைகின்றது
இந்தப் பாவி மனிதர்கள் மனதில் மீண்டும்
வந்து பிறக்க மாட்டாயோ!
பாலனே உன் ஆட்சி இங்கு மலராதோ!

மனிதனின் ஆட்சி இன்று உச்சம் அடைகின்றது
மனிதனே மனிதனைப் பிடித்துத் தின்னும் நிலை
பொருளாதார அவல நிலைமைக்குள் சிக்குண்டு
வாழ வழி தேடும் மானிடமாய்
இத்தேசத்தில் வலம் வருகின்றோம்

விலைவாசிகள் நிமிடத்திற்கு ஒரு முறை
அதிகரிக்கும் நிலைமை
மானிடர்கள் நாலாபக்கமும் முடங்கும் நிலை
இவ் ஆட்சி முடிவுற்று உன் ஆட்சி மலராதோ
உன் மக்கள் பேரொளியைக் காண

எம் அழுகுரல்கள் உம் காதுகளில் கேட்கலையோ!
இழந்த அமைதியை மீண்டும் தரமாட்டாயோ
கவலை மறந்து மகிழ்ச்சியை - எம்
முகங்களில் மலரச் செய்யமாட்டாயோ
மீண்டும் பிறந்து எம் துயர் துடைக்க மாட்டாயோ
எம் பாவங்களை மன்னித்து எம் உள்ளங்களில்
மீண்டும் பிறக்க மாட்டாயோ! பாலனே!!

**ம.றெக்னோ டெறிக்சன்**
**புனித நீக்கிலார் ஆலயம்**
**நாவாந்துறை**

## பாரெல்லாம் மகிழ பாலன் பிறந்தார்.

இயேசு பாலன் பிறந்தாரே
எளிய மாட்டுத் தொழுவத்தில்
மனித நேயம் மலரவே
மண்ணில் பிறந்தார் மரி மைந்தனாய்

மீட்பின் ஒளியைக் கண்டு
பாவ வாழ்வு களையவே
மன்னன் இயேசு மைந்தனாய்
மழலையாகப் பிறந்தாரே

உண்மையான அமைதி தான்
உன் வரவால் உதயமாயிற்று
பண்ணிசைத்துப் பாடியே
பரமன் பாதம் பணிவோமே



நின் பிறப்பை எண்ணியே
நினைந்து நாமும்
வணங்குவோம்
பேருவகை கொண்டு
தினமும்
பாரெல்லாம் மகிழுதே

**சேரருபன்**
**செர்வின்**



## பாலகனின் பிறப்பு நாள்
### பெருந்தொற்றின் இறுதி நாளாக வேண்டும்

போதும் பாலகா - இப்
பார் பெற்ற துன்பம்

மூடிக்கிடந்த கன்னியின் வயிற்றை
தேடிவந்த தேவனின் அருளே
முடங்கிக் கிடக்கும் எம் பாரை -உம்
மழலைக் கண்ணால் பாரும்

காலம் எல்லாம் படைத்த கடவுளே
அடிமையின் உடலை அணிந்திட வந்தவரே
எம்மவரின் விடிவுகாலம் - உம்
பிறப்பு நாளாய் அமையக் கூடாதா?

முகக் கவசங்களுக்குள்
முடங்கிக் கிடக்கும் - எம்
முகங்களில் நிரந்தரமாய் - பொய்க்
கவசங்கள் பதியமுன்
பிறந்துவிடு பாலகா - விடிவைத்
தந்துவிடு

புல்லென மெத்தையோ என்றுமறுக்காமல்
இல்லமாய் மாடடை குடிலைக் கொண்ட
மரிமைந்தனே
விலைவாசி உயர
நிர்க்கதியாக நிற்கும் மனுக்குலத்தை
ஒரு கணம் பாருமப்பா

மனிதனாய் நீ வரும்
மாண்புறு நாளில்
இனிதே மகிழ்ந்து
இன்னிசை முழங்குவோம் பாலகா
உம் பிறப்பு நாள் - இப்
பெரும் தொற்றின் இறப்பு நாளாக வேண்டும்
உம் அருள் பொழிவாயா பாலகா...

**ம.மரிய றுனுயன்**
**புனித மாட்டீனார் குருமடம்**
**யாழ்ப்பாணம்.**

## வந்திடு பாலகா

வார்த்தை மனுவானார் நம்மிடையே குடிகொண்டார்
காரிருளில் நடந்து வந்த மக்கள்
பேரொளியினைக் கண்டனர்
விண்ணோடும் மண்ணோடும் மகிழ்ந்து பாடிட
வானங்கள் பனிமழையென வெற்றியைப் பொழிந்திட
மனுமகன் பிறந்தார் மனுக்குல மீட்புக்காய்

அன்பெனும் விதையினை அவனியில் விதைத்திட
தந்தையின் அன்பினைத் தரணியில் பரவிட
தன்னலம் இன்றிப் பிறர் நலம் நாடிட
தரணியில் பிறந்தார் நம் தேவ பாலகன்

மாயை உலகினில் மாந்தர்கள் தேடி அலையும்
மக்கள் மனதினில் நம்பிக்கை ஒளியை
நாளும் விதைத்திட உண்மை வாழ்வினை
உகந்ததாய் அமைத்திட வந்திடு பாலகா

பகையையும் மாசற்ற வாழ்வும் பாராமுகமும்
வன்முறை எங்கும் வான் வளர
வளர்ந்திடும் வேளையில்
நானிலம் அமைதிபெற நன்மையினை விதைக்க
பூமியில் நிலைத்திட - அருள்புரி பாலகா

கொள்ளை நோய்களும் கோர வறுமையும்
நாள்தோறும் ஏறிடும் விலைகளும்
வாட்டி வளைத்திடும் இவ்வேளை தனில்
வாழ்வினை வளமாக்க வந்திடு பாலகா

ஆடம்பரங்களும் ஆபாசங்களும்
அதிகரித்த இவ்வேளை தனில்
பொன்னும் பொருளும் போதைப்
பொருளும் தேடி அலையும் மாந்தரிடையே
புடமிட்டுப் புதுவாழ்வு அளித்திட
புறப்பட்டு வா பாலகா

கூட்டொருங்கியக்கத் திருஅவையால் - நாம்
ஒன்றாய் பயணித்திட
ஒன்றிப்பை எம் வாழ்வில் என்றும் வளர்த்திட
பங்கேற்கும் திருஅவையில் பணிகள் பல புரிந்திட
பாலகா உம் அருள் தாருமே நிறைவாய்
பாரில் மாந்தர் பரிவு நிறை உள்ளத்துடன்
பயணித்திட வழி காட்டிடு தேவ பாலகா

**யே.அனுஸ்டதாஸ்**
**மாதகல்**

## பாலன் பிறப்பு

பனிப்பூக்கள் பள்ளியெழும் இரவில்
கன்னி உதரத்துக் கனியாக
புனித ஆவி புனைந்த புதுக்கவியாக
புண்ணியவான் இயேசு பூமிக்கு வந்தார்

வேதங்கள் சொன்னபடி
பேதங்கள் பிணக்கு நீங்கி
உருக்கமாக 'மனிதம்' கொண்டு
சொர்க்கம் சேர்க்க இயேசு பிறந்தார்

கைகூப்பிய மலர்களாய்
கடவுள் திருவடி இடையர் வணங்க
மெய்ஞானிகள் காணிக்கை வழங்க
பொய்யாமொழி பெருமான் பெத்தலேமில் பிறந்தார்.

ஆற்றலிழந்த எம் ஆன்மாவில்
போற்றுதற்குரிய பாலன் பிஞ்சுப் பாதம் பதிய
தேசம் தொலைத்த சிட்டுக்களாம் - எம்
நேச உறவுகள் நெஞ்சுக் காயங்களற்ற
வீசும் தென்றலால் இயேசுவை வேண்டுவோம்.

**எம்.ஜெதுர்சன்**
**புனித மாட்டீனார் குருமடம்**
**யாழ்ப்பாணம்.**

## உலகைத் தேடும் கடவுள்

புதுமையாய்
பூமி கதைக்கிறது
ஏய்!
மயங்கும் மனிதமே
எங்கே - உன்
செங்கோல்
எங்கே - உன்
கொடுக்கு

வலித்து வலித்து
சலித்துக் கிடக்கிறாய்

ஏதேன் தோட்ட ஏவாளாய்
ஏமாறிக் கிடக்கிறாய்

மூச்சுப் பிடித்து
பேச்சுக் கொடுக்கிறாய்
மானிடமே!
இயற்கை - என்னில்
இருண்டு கிடக்கிறது
செயற்கை - உன்னில்
அறுவடை செய்கிறது

நானோ
உருண்டு கிடக்கிறேன்
நீயோ
மரணித்துக் கிடக்கிறாய்

கடவுளின் கனவுகளும்
கடந்துகோகும் நினைவுகளாய்
களைத்துக் கிடக்கிறது

மானிடமே
என்ன செய்தாய்
உன்னையே - நீ
என்ன செய்தாய்
மரங்களும் விலங்கும் கூட
மார்தட்டி அழுகிறதே
என்ன செய்தாய்
மனிதா...!

மறுமுறை கேள்...!
உன்னைத் துடைக்க
தன்னைக் கொடுத்து
உலகைத்தேடி - ஒருவன்
உருண்டு கிடக்கிறான்

பாவம் பறிக்க
சாபம் தெளிக்க
சாந்தமாய் - ஒருவன்
சாய்ந்து கிடக்கிறான்

மீண்டும் ஒருமுறை - நீ
மீண்டுகொள்ள
ஆடுகள் நடுவில்
ஆயனாய் ஒருவன்
அழுது கிடக்கிறான்

ஏய்
மயங்கும்
மனிதமே..!

தெளிந்து கொள்
மீண்டும்
தெரிந்துகொள்

கண்ணீர் காயும் - உன்
கல்லான இதயத்தில்
நம்பிக்கை தேடு!

அவர் ஆடையின் விளிம்பும்
- உன்
அடைக்கலமாகும்.

**சகோ. சீ.இ.ஜெ.றொகான்**
**புனித சவேரியார் குருமடம்**
**யாழ்ப்பாணம்**

## சுமந்தது போதும்



பாவத்தின் வினையறுக்க
அன்று பரமன் மண்ணிலுதித்தான்
மண்ணிலிருந்த பாவத்தையெல்லாம்
தன் மரணத்தால் மடியச் செய்தான்
அகந்தை கொண்ட பாவம்
இன்னும் அதிகரித்ததே தவிர
அடியோடு அழியவில்லை - அன்று
ஆண்டவன் கண்ட ஒரு யூதாசும் -
இன்று
பல இலட்சமாய் மாறினான் - அன்று
ஆண்டவன் கண்ட ஒரு பேதுருவும் -
இன்று
பல கோடியாய் மாறினான் - அதனால்
ஆண்டவனே உன் மரணம்
மண்டையோடே முடிந்ததாகட்டும்
அப்படி நீ மீண்டும் பிறப்பதாயின்
கையில் சிலுவையையும் கொண்டு வா
இந்த மண்ணிலே - உனக்கு
மரணத்தை சம்பாதிக்கும்
மனிதர் இருக்கும் வரை...

**கோ.சாருஜன்**
**புனித மடுத்தீனார் குருமடம்**
**யாழ்ப்பாணம்.**

## இவ்வாறு ஏன் பிறந்தாய்

தந்தை அருளிய வார்த்தைக்காய்
தரணியதில் பிறந்தது ஏனோ
தங்கம் வைரம் தேவையில்லையென
தவிட்டுப் பொடியிடையே
தங்கமகன் பிறந்தது ஏனோ

மனிதரிடையே பிறந்தால்
மனித மாண்பு அற்றுப் போய்விடுமென்றோ
மாட்டுக் கொட்டிலிலே
மரியன்னை மடியில் பிறந்தாயோ

இனவெறியர்களிடையே பிறந்தால்
இனவெறி பிடித்து விடுமென்றோ
இடையர்கள் மத்தியிலே
இளந்தென்றல் குளிருக்குள் பிறந்தாயோ

அதிகாரம் மிக்கவரிடையே பிறந்தால்
அகந்தை குடிகொண்டு விடுமென்றோ
அகதியைப் போன்று - நீர்
அடுத்தவர் வீட்டில் பிறந்தாயோ

பிறரன்பில்லா எம்மிடையே - நீர்
பிறக்கக் கூடாது என்றோ
கொல்லும் கிருமியிடையே - இவ்வருடம்
கொண்டாடுகின்றீர் உம் பிறந்த தினத்தை



## விடியலைத் தருமா? இந்த விடிவெள்ளி?

இறப்பதும் பிறப்பதும்
படைப்பின் நியதி
அதைக் கடந்து செல்வது
எம்மவரின் தகுதி
மரியின் கருவில் அவதரித்து
விடியலுக்காய்த் தவிக்கும் எமக்காய்
விடியலின் வெள்ளியாய்
அவதரித்தார் எம் பாலகன்
உறவுகளைக் காண முடியாது
முடக்கப்பட்டு முகக்கவசங்களுள்
எம் முகத்தினை மறைத்து
நாளும் பொழுதும்
தவிக்கிறோம் கொரோனாவால்
பாவத்தினால் உம்மைப்
பிரிந்து தனிமரமாய்
தவிக்கின்றோம் - நிதம்
எம் வாழ்வில்
விடியலைக்காண
விடிவெள்ளியாய்
எம் மனங்களில்
பிறப்பாயோ? பாலகா...!

**மெ.டிசாறின்**
**புனித மடுத்தினார் குருமடம்**
**யாழ்ப்பாணம்**



# கிளாரா

சிறுகதை

மனோ சின்னத்துரை

அந்த மிகப்பெரிய பல் பொருள் அங்காடி சனத்திரளால் நிரம்பி வழிந்தது. நானும் பானு வும் கடைகளை இரசித்தவாறே நடந்துகொண்டிருந்தோம். தள்ளு வண்டிலிலிருந்த சிந்து புதினம் பார்த்தபடி தன்பாட்டிற்கு விளையா-டிக் கொண்டிருந்தாள்.

நாங்கள் ஒரு பொம் மைக் கடையோரம் போய்க் கொண்டிருந்தபோது திடீரென்று வண்டில் தடுக்கி நின்றது. பார்த்தபோது சிந்து கடைக்கு வெளியே அடுக்கியிருந்த கரடிப் பொம்மையொன்றைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

பானு என்னைப் பார்த் தாள். எனக்குப் புரிந்துவிட்டது. சரியென்று தலையாட்டினேன். பானு சிரித்தாள். கரடிப்பொம்மை சிந்துவின் கைகளுக்குள் வந்தது.

அது ஒரு அளவான, அழகான பொம்மை. மண்ணிறத்திலான அந்தப் பொம்மைக்குக் கழுத்தில் கட்டப்பட்டிருந்த சிவப்பு றிபன் இன்னும் அழகைக் கொடுத்தது. சிந்து பொம்மையை இறுக கட்டி அணைத்தாள். அந்த இறுக்கத்தில் அவளின் மகிழ்ச்சி தெரிந்தது. அன்றைய 'ஷொப்பிங்' எங்களுக்கு மிகவும் சுலபமாக அமைந்தது.

சிந்துவின் முழுப் பொழுது களும் இப்போது கரடிப் பொம்மை யுடனேயே கழிகிறது. மற்றைய விளையாட்டுப் பொருட்கள் அவள் கண்களிற்குத் தெரிவதேயில்லை.

எங்களுக்கு அது ஒருவித கவலையையும் அச்சத்தையும் தந்தது. ஒரே விளையாட்டுப் பொருளில் மட்டும் கவனத்தைக் குவிப்பது குழந்தைக்கு ஆரோக்கியமல்ல என்பதை நாங்கள் அறிந்திருந்தோம். அதை விடவும் நாங்கள் ஆசையாய் வாங்கிக் குவித்த மற்ற விளை யாட்டுப் பொருட்களெல்லாம் அனாத ரவாய் கிடப்பதை நினைக் கவும் கவலையாயிருந்தது. சில பொம்மைகள் சிந்துவை ஏக்கத்துடன் பார்த்தன. 'எங்களையும் தூக்கி விளையாட மாட்டாயா சிந்து?' என்பது போல அவைகள் பார்வையால் கெஞ்சின. நாங்களும் எவ்வளவோ முயன்று பார்த்துவிட்டோம். எங்களது முயற்சி அவளுக்குக் கரடிப்பொம்மையின் மீதான நெருக்கத்தை மேலும் அதிகரித்தது.

அவள் பொம்மைக்குக் கிளாரா என்று பெயர் வைத்தாள். அவள் தூங்கும்போது கிளாரா அருகில் அமைதியாகத் தூங்கி யது. அவள் கிளாராவை இறுக அணைத்தபடி தூங்கினாள். இப்போது அவளுக்குப் பானு தேவைப்படவேயில்லை. சாப்பிடும்போதும் தனக்கு அருகில் ஒரு குட்டிக் கதிரைபோட்டு கிளாராவை இருத்தினாள்.

'ஆ.... அ .... ஆ...க் காட்டுங்கோ ... ஆக் காட்டுங்கோ செல்லம்....' என்று கிளாராவுக்கும் அம்மா போல விளையாட்டுக்காட்டி ஊட்டி விட முயற்சித்தாள். நாங்கள் சிரிக்க, அவள் வெட்கப் பட்டாள்.

பாடசாலை போகத் தொடங்கியபோது கிளாராவையும் பாடசாலைக்குக் கொண்டு போகத் துடித்தாள். அதைத் தவிர்ப்பது எங்களுக்குப் பெரும் போராட்டமாக இருந்தது. பாடசாலைக. கேற்வரை கிளாரா அவளுடன் பயணித்தது. திரும்பி வரும்போதும் அப்படியே. நாங்கள் சமாதானமாக அப்படியே ஒரு முடிவுக்கு வந்திருந்தோம். சில நாட்கள் அப்படியே தொடர்ந்தன. சிந்துவிடமிருந்து கிளாராவைப் பிரிப்பது மிகுந்த சிரமமாக இருந்தது.

பானுவுக்கு நாய் வளர்க்க ஆசையாக இருந்தது. எனக்கு அதில் அவ்வளவு நாட்டமில்லை. இந்த நாட்களில் ஒரு நாயைப் பராமரிப்பது



எவ்வளவு செலவானதும், சிரமமா-னதும் என்பது எனக்குத் தெரிந்திருந்தது. கடைசியில் அந்த வேலையும் என்மீதே பொறுத்துவிடும் என்பதும் நான் அறிந்த ஒன்றுதான். ஆனாலும் பானுவிடம் நான் தோற்றேன்.

வீட்டில் இப்போது ஒரு நாய்க்குட்டியும் வந்து விட்டது. நாய்குட்டிக்கு ரொமி என்று பெயர் வைத்தோம். ரொமி வந்து இரண்டு நாட்கள்கூட ஆகவில்லை. எங்களுடன் நன்றாக ஒட்டிவிட்டது.

ரொமி, சிந்துவுடன் விளை யாடப் பிரியப்பட்டது. ஆனாலும் கிளாராவை விட்டு சிந்துவால் வெளிவர முடியவில்லை. சிந்துவும் கிளாராவும் விளையாடுவதை ரொமி கவலையுடன் பார்த்துக்கொண்டிருந்தது. அது ஒரு நல்ல காவல்காரன் போலக் காவல்காத்தது.

காலம் மெதுவாய் நகர்ந்து விட்டது. சிந்துவும் கொஞ்சம் வளர்ந்துவிட்டாள். ஆனாலும் கிளாரா இன்னும் அவளு டைய பிடிக்குள்ளேயே வாழ்ந்தது. ஒருநாள் சிந்து பதட்டத்துடன் வீடு முழுவதும் ஓடித்திரிந்தாள். 'எங்க கிளாரா..... எங்க கிளாரா' என்று வீடு அதிரும்படி கத்தினாள். ரொமி ஓடிச்சென்று செற்றிமேல் குந்திக்கொண்டது. அதுவும் பயந்து நடுங்குவது தெரிந்தது. பானு ரொமியைத் தடவிக் கொடுத்தாள். பின் நாங்களும் சிந்துவுடன் சேர்ந்து வீடு முழுவதும் தேடினோம்.

சிந்து 'கிளாரா கிளாரா' என்று அழும் தொனியில் அழைத்துப் பார்த்தாள். அவளைப்பார்க்க எங்களுக்குத் தாங்க முடியாதிருந்தது. நாங்கள் சிந்துவைத் தூக்கித் தேற்றினோம். ரொமி எங்கள் கால்களை நக்கியது.

சிந்து கேவிக்கேவி அழுதாள். அவளைத் தேற்றுவது சிரமமாக இருந்தது. அவளைச் சாதாரண நிலைக்குக் கொண்டு வருவது எங்களுக்கு முடியாதிருந்தது.

இப்போது அவள் மெது மெதுவாக ரொமியுடன் பொழுதினைப் போக்கத் தொடங்கியிருந்தாள். எங்களுக்கு அது சற்று ஆறுதலாக இருந்தது .

சிந்துவுக்குப் பிறந்தநாள் வந்தது. அவளை மகிழ்ச்சிப்படுத்த பிறந்தநாளுக்கு ஏற்பாடு செய்தோம். அதற்கூடாக அவளை மேலும் சகஜநிலைக்குக் கொண்டு வரலாம் என்று நம்பினோம். அவளது நண்பர்களோடு, முன்பு எங்கள் வீட்டிற்கு அருகிலிருந்த ஒரு குடும்பத்தையும் அழைத்திருந்தோம்.

அவர்களுக்கும் சிந்துவை விட ஒருவயது குறைவான அஞ்சு என்ற ஒரு மகள் இருந்தாள். சிந்து பிறந்திருந்தவேளை அவர்களின் உதவி எங்களுக்குப் பேருதவியாக இருந்தது. ஆனாலும் இக்காலத்து நெருக்கடி வாழ்க்கை எங்களையும் அவர்களையும் அதிகம் நெருங்கவிடவில்லை . அவர்கள் வீடு மாறியதிலிருந்து எங்களுக்கும் அவர்களுக்குமான தொடர்பு முற்றாகவே இல்லாது போயிருந்தது. இருந்த போதும் அவர்களையும் அழைக்க வேண்டுமென்று ஆழ்மனது உந்தியது.

சிந்து 'கேக்' வெட்டும் நேரம் மிக ஆரவாரமாக இருந்தாள். அவளுக்கென்று போடப்பட்டிருந்த சிறிய ரீப்போவில் ஏறி நின்றாள். கையில் 'றிபன்' சுற்றப்பட்ட 'கேக்' வெட்டும் கத்தியை வைத்துச் சந்தோசத்தில் ஆடிக்கொண்டிருந்தாள். எங்களுக்கு மகிழ்ச்சியாயிருந்தது. அப்போதுதான் அஞ்சு தன் பெற்றோருடன் வீட்டிற்குள் நுழைந்தாள். அவள் கையில் கிளாரா இருந்தது. சிந்து திடுக்கிட்டாள். பாய்ந்து போய்க் கிளாராவைப் பறித்தாள். எங்களுக்குத் தர்ம சங்கடமாய்ப் போய்விட்டது. அஞ்சுவும் விடவில்லை. இழுபறிப்பட்டார்கள்.

நாங்கள் ஒருவாறு சிந்து வைத் தூக்கிக் கிளாராவைப் பறித்து அஞ்சுவிடம் கொடுத்தோம். 'இல்லையடா அது வேற கிளாராவடா அது உங்கடயில்லை' என்று சமாதானப்படுத்திப் பார்த்தோம். அவள் கேட்பதாயில்லை. கால்களை நிலத்தில் போட்டு உதறிக் கத்தினாள். அஞ்சு , கிளாராவை இறுகப் பிடித்திருந்தாள். கிளாராவைப் பார்க்க, சிந்துவின் கிளாரா மாதிரித்தான் தெரிந்தது. அதே நிறம். அதே உருவம். கழுத்தில் மட்டும் சிவப்பு றிபனைக் காணவில்லை .

எனக்கு மெல்லிய சந்தேகம் வந்தது. பானுவுக்கும்தான். நாங்கள் பார்வையால் பேசிக்கொண்டோம். சிந்து அழுதபடி என் தோளில் கிடந்தாள். ஆனாலும் அது சிந்துவின் கிளாராவாக இருந்தால் எப்படித் துணிந்து எங்கள் வீட்டுக்கே எடுத்து வருவார்கள்? எங்கள் சிந்தனை ஓடியது.

'ச்சீ.... அவர்கள் அப்படிப்பட்ட வர்கள் இல்லை ' இருந்தாலும்.... குழப்பமாக இருந்தது. நிலைமையைச் சீருக்கு கொண்டு வர முடியாமல் திண்டாடினோம். சிந்து கிளாராமீது எவ்வளவு பிரியமாக இருந்தாளோ அவ்வளவு பிரியமாக அஞ்சுவும் இருப்பது தெரிந்தது. கிளாராவின் கதையை நாங்கள் சொல்லிக் கொண்டிருந்தபோது அஞ்சுவின் அப்பாவினதும் அம்மாவினதும் முகங்கள் கலவரப்பட்டன. அவர்கள் அஞ்சுவை நெருங்கினார்கள். அஞ்சுவைத் தூக்கினார்கள். மெதுவாக அஞ்சுவிடமிருந்து கிளாராவைப் பறிக்க முற்பட்டார்கள்.

அவள் அழுதாள். விடாப்பிடி யாக நின்றாள். எங்களுக்கு எதுவும் விளங்கவில்லை . அஞ்சுவின் வலி எங்களுக்குப் புரிந்தது. அவளிடமிருந்து பறிக்க வேண்டாமென்று கெஞ்சினோம். அவர்கள் 'இல்லை இது சிந்து வின் பொம்மையாகத்தான் இருக்க வேண்டும்' என்றார்கள்.

'தெருவில் கிடந்தது. அஞ்சு கண்டபோது ஆசைப்பட்டாள். அதை எடுத்துக் கழுவி அவளிடம் கொடுத்தோம். அஞ்சுவால் ஒரு நிமிடம்கூட அந்தப் பொம்மையைப் பிரிந்து இருக்க முடியாது' என்று சொன்னபோது அவர்கள் கண்கள் கலங்கியிருந்தன. ஆனாலும் அஞ்சுவிடமிருந்து அந்தப் பொம்மையைப் பிடுங்கித்தர அவர்கள் மிகவும் பிடிவாதமாய் இருந்தார்கள்.

நன்றி: கொரோனா வீட்டுக்கதைகள்

## கிறிஸ்மஸ்

கிறிஸ்து + மஸ் Christ + Mass என்ற சொல்லுக்கு கிறிஸ்துவின் ஆராதனை என்று பொருள். ஆங்கில வழக்கில் கிறிஸ்துவின் மாஸ் என்றழைக்கப்பட்டது. மாஸ் என்பது திருப்பலி என்பது நாம் அறிந்ததே. அது மருவி உருவானது தான் கிறிஸ்மஸ். கிரேக்க ஊர், இது கிறிஸ்துவின் பெயரைக் குறிக்கிறது.

## குடில்

1223 ஆம் ஆண்டு கிரேச்சியா எனும் இடத்தில் உள்ள அசிசி நகரில் புனித அசிசியாரால் முதன் முதலில் கிறிஸ்மஸ் குடில் உருவாக்கப்பட்டது.



## கரோல்

கேரல் (கரோல்) என்ற சொல் சாக்ஸின் மொழியிலிருந்து வருகிறது. இந்தச் சொல்லின் அர்த் தம் சுற்றி இருந்து கொண்டு ஆடிய வணக்கம் பாடுவது. கி.பி. 11 ஆம் நூற் றாண்டில் வீடு வீடாகக் கேரல் (கரோல்) பாடிச் செல்லும் பழக்கம் தோன்றியது.

# கிறிஸ்து பிறப்பின் பன்முகக் கதிர்கள்



அருட்பணி. ஜீவா போல் (அ.ம.தி)

### தேடிவரும் தேவன்

நாம் அன்பு செய்பவர்களைத் தேடிச்சென்று சந்திப்பதிலும் அவர்களோடு உரையாடுவதிலும் உறவாடுவதிலும் நம் உள்ளம் பெரு மகிழ்ச்சி கொள்கின்றது.

உண்மையிலேயே நாம் அன்பு செய்பவர்களை நாம் தேடிச்செல்கின்றோம். நாம் நேசிப்பவர்களுக்காக எந்த ஒரு தியாகமும் செய்யத் தயாராக இருக்கின்றோம். நமது மனம் விரும்புவோரின் மனமகிழ்ச்சியை நாம் விரும்புகின்றோம். அதேபோன்று இறைவன் நம்மைத் தேடி வருகின்றார்.

ஆம் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடி வருகின்றது. தனது அளவுகடந்த அன்பினால் நம்மை அரவணைக்க வருகின்றார். நமது நம்பிக்கையை வலுப்படுத்தி நமக்கு நிறைவான மகிழ்ச்சியைக் கொண்டுவருகின்றார். நாம் சுவைக்கும் அந்த இறையன்பைப் பிறரோடு பகிர்ந்து கொள்வோம். பெற்றுக்கொள்ளும் இறைஇரக்கத்தைப் பிறருக்கும் காட்டுவோம். வளர்த்துக்கொள்ளும் இறைநம்பிக்கையை பிறரிலும் விதைப்போம். அனுபவிக்கும் இறைமகிழ்ச்சியை பிறர் வாழ்விலும் ஏற்படுத்துவோம்.

### நல்லெண்ண அமைதி

அஞ்சாதீர்கள் என்ற வானதூதர்களின் கிறிஸ்து அறிவிப்பு இடையர்களுக்கு அமைதியையும் நல்லெண்ண எதிர்பார்ப்பையும், தந்தது. தமது வார்த்தையிலும் வாழ்விலும் நல்ல நேர்மறை அதிர்வுகளை வெளிப்படுத்தும் மனிதர்களை அமைதியும் நல்லெண்ணமும் எப்போதும் ஆட்கொள்வதை நாம் காண முடியும். நாம் பகிரும் செய்திகள் பிறருக்கு நல்ல மனநிலையை உருவாக்குவதாக இருந்தால், பகிர்வது நல்லது. தேவையற்ற வதந்திகளையும் பிறரைத் துன்பத்தில் மனக்கவலைகளில் ஆழ்த்தும் அடிப்படை ஆதாரமற்ற புனைவுக் கதைகளை, நமது உரையாடல்களைத் தவிர்ப்போம். எண்ணங்களை எச்சரியுங்கள் அவை வார்த்தைகளைக் கண்காணிக் கட்டும். இறை தூதர்களின் வாழ்த்துமொழி நமக்கொரு எடுத்துக்காட்டாக அமையட்டும். நல்ல எண்ணங்களை வளர்ப்போம். நம் வாழ்த்தொலி பிறரின் வாழ்த்தொலியோடு இணையட்டும். அமைதி உரித்தாகுக.

### சந்திப்பின் செய்தி

இருவருக்கிடையே ஏற்படுகின்ற உளமார்ந்த உண்மையான அன்பு கலந்த சந்திப்பு, மனதிற்கு சொல்லொண்ணா ஆனந்தத்தை அளிக்கின்றது. அது சோகத்தில் இருப்பவர்களுக்கு உற்சாகத்தையும் கவலையில் இருப்பவர்களுக்கு ஆறுதலையும் அளிக்கின்றது அது தேவையில் இருப்பவர்களுக்கு உறுதுணையையும் வேதனையில் இருப்பவர்களுக்கு அரவணைப்பையும் அளிக்கின்றது. அது மனம் உடைந்தவர்களுக்கு நம்பிக்கையையும் மகிழ்ச்சியில் இருப்பவர்களுக்கு பேரானந்தத்தையும் அளிக்கின்றது.

அத்தகைய ஓர் உளமார்ந்த ஆனந்த சந்திப்புத்தான் அன்னை மரியாவுக்கும் எலிசபெத்துக்கும் இடையில் நடக்கின்றது. இன்று எண்ணற்றோர் நமது சந்திப்பிற்காக ஏங்கி நிற்கின்றனர். ஆம் முதியோர் இல்லத்தில் நமது அன்பிற்காக ஏங்கி நிற்கும் முதியவர்கள் அனாதை இல்லங்களில் நமது அரவணைப்பிற்காக ஏங்கி நிற்கும் குழந்தைகள் சிறைகளில் நமது ஆதரவிற்காக ஏங்கி நிற்கும் சூழ்நிலைக் கைதிகள் மருத்துவமனைகளில் நமது உடனிருப்புக்காக ஏங்கி நிற்கும் நோயாளிகள் இன்னும் எண்ணற்றோர். இவர்களைச் சந்திப்போமா? இவர்கள் வாழ்வில் மகிழ்ச்சியைக் கொணர முயல்வோமா?

### அன்பின் செய்தி

உலகத்தின் மீதுள்ள அன்பைப் புதுப்பித்து உறுதிப்படுத்த நம்மோடு உறவாட இறைவன் தந்த அற்புத வாய்ப்பு இந்த கிறிஸ்து பிறப்பு. இந்த அன்பின் அடையாளத்தை நாம் வரவேற்கும் இந்நாட்களில் வெறும் திருவருகைக் கால மெழுகுதிரிகளை ஏற்றி வைப்பதோடு நிறுத்திவிடாமல் நமது மனங்களில் அன்புத் திரிகளை ஏற்றிவைத்துப் பிறர் வாழ்வில் ஒளியேற்றுவோம். நம் அன்பு சொல்லிலும் செயலிலும் பகிரப்படும் போது கிறிஸ்து பிறப்பு அர்த்தப்படுகிறது. நாம் செய்யும் ஒவ்வொரு அன்புப் பகிர்வுக்கும் நம் வீடுகளில் ஒரு விதை விதைப்போம். நமது மனம் போல அவைகளும் மாற்றம் பெற்று வளரும் போது நமது இல்லக் குடில்களில் புல் தரைகளை உருவாக்குவோம். நமது இல்லக் குடில்களில் பாலன் பிறக்க நம் அன்புச்செயல்கள் அர்த்தமுள்ளதாகட்டும்.நமது அன்பு பகிர்வு புல்தரையின் விஸ்தரிப்பு.

### தாழ்ச்சியின் செய்தி

இறை நிலையிலிருந்து மனித நிலைக்குத் தன்னைத் தாழ்த்திக்கொண்ட இறை நிகழ்வே இந்தக் கிறிஸ்து பிறப்பு விழா. தான் தனது என்ற அகங்கார நிலை நம்மை பல நேரங்களில் மற்றவர்களைப் பற்றி அவர்கள் நிலையிலிருந்து சிந்திக்க விடாமல் மாற்றிவிடுகிறது. நாம் காணும் உலகத்திலிருந்து மற்றவர்களை பார்க்கிறோம் அவர்களையும் பார்க்கக் கட்டாயப்படுத்துகிறோம்.

இறைவன் மனிதனாகும்போது கிறிஸ்து பிறக்கிறார். மீட்பின் பிறப்பு நம்மிடையே நிகழ்கிறது. நம் சிந்தனையில் பிறரின் நிலைக்கு மாறும் போது அங்கே மனிதம் பிறக்கிறது. புதிய உறவு மலர்கின்றது. நமது அணுகுமுறைகளில் பிறரை அவர்கள் மனநிலையில் இருந்து புரிந்துகொள்ள முயற்சிப்போம். தாழ்ச்சியில் புனிதராகவில்லையெனினும் குறைந்தது மனிதராகுவோம். இறைமைந்தன் நம்மில் நம் உறவில் பிறக்கட்டும்.

### குடும்பத்தின் செய்தி


கிறிஸ்து பிறப்பு ஒரு குடும்பத்தின் கதை. சாதாரண மக்களின் வாழ்க்கைக்கதை. திருமணம் எனும் பந்தத்தின் நல்ல எடுத்துக்காட்டு. தயங்கிய யோசேப்பு தளராத மனம் கொண்ட அன்னை மரி இவர்களின் குடும்ப சவால்களில் ஒருமித்த பங்கெடுப்புத்தான் இந்தக் கிறிஸ்து பிறப்பு. இறைவனால் இணைக்கப்பெற்ற இந்த குடும்பம் இறை திருவுளத்தை நிறைவேற்றி நம் குடும்பங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக இருக்கின்றது.

பேறுகாலப் பெண்ணின் சவால்களும் மனைவியைப் புரிந்து கொள்ளும் யோசேப்பின் தியாக உள்ளமும் திருமண பந்தத்தில் இணைகிற இரு பாலாருக்கும் முன்னோடியாய் அமைகின்றன. கிறிஸ்துமஸ் வெறும் சடங்காக மட்டும் இருந்துவிடாமல் பொறுப்புணர்வு கொண்ட தந்தை தாயாக மாற இந்தக் கிறிஸ்து பிறப்பு நம்மை அழைக்கின்றது. நம் குடும்பத்தில் பாலன் பிறக்க நமது மனம் தயாரா?

### நம்பிக்கைச் செய்தி

கிறிஸ்து பிறப்பு நமக்குக் கற்றுத்தரும் பாடம் நம்பிக்கை. நெடுந்தொலைவு பயணம் கடுங்குளிர் காலம் சவால் நிறைந்த நேரம் ஏழ்மைக் கோலம் தளராத மனம் வழிகாட்டும் நம்பிக்கை நட்சத்திரம் - இவை கிறிஸ்து பிறப்பு நிகழ்வின் சுருக்கங்கள் எனினும் அவையே நம்பிக்கையின் விதைகள் நம் வாழ்வின் படிநிலைகளைப் படம் போட்டுக் காட்டுவன.

வாழ்க்கைப் போராட்டங்கள் நம்மைச் சோர்வடையச் செய்யும் வேளைகளில் தளராத மனம் கொண்டு இலக்கை நோக்கி நடந்தால் நாம் புதுப் பிறப்பைக் கண்டடைவோம் என்ற நேர்மறை உந்து விசையை இந்த நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது. இந்த மீட்பின் பிறப்பு நம்மிடையும் நடந்தேற நம் வாழ்வும் விடியலை நோக்கிப் பயணிக்கட்டும். ஏனெனில் சவால்களின் மத்தியில் தான் சாதனைகள் பிறக்கின்றன.

# மாட்டுத் தொட்டிலில் பிறந்த மனிதம் நம்மிடையே குடிகொள்வதாக!



நாம் நடந்து வந்த பாதையை திரும்பிப் பார்க்கையில் சென்ற மூன்று வருடங்களும் இருண்ட காலங்களாகவே கழிந்து போயின. ஈஸ்டர் தாக்குதல், கொரோனா அலைகள், தனிமைப்படுத்தல்கள், உயிரிழப்புக்கள் எனப் பல துன்பங்கள் எம்மை வாட்டி வதைத்தமை இன்னமும் முடிந்தபாடில்லை.

ஏன் இவ்வாறு நிகழ்கின்றது என்பது பதில் காணமுடியா வினாவாக எம் மனங்களில் தோன்றி மறைகின்றது. இந்த வருட நத்தார் பிறப்புக்காலமும் வழமைபோல கடந்து போகலாம். ஆனால் மனுவுரு எடுத்த இறைமகன் இயேசு எமக்குத் தருகின்ற செய்தி எம் ஒவ்வொருவரின் வாழ்வினையும் மீள்பரிசீலனை செய்ய அழைக்கின்றது.

வீட்டுவளவிலென்ன வடதுருவ பனிக்குள் என்ன தன்பாட்டில் இருக்க நினைத்தல் சுயநலம் ஏனெனக்கு வீண்சிக்கல் என்றே எண்ணில் எடுத்த எம் மனித பிறவிக்கு அர்த்தமில்லை எஜமானின் துன்பத்தில் கண்ணீரைத் துடைத்துவிடும் ஐந்தறிவு ஜீவன்களின் தூய அன்பின் முன்னேசுயநல மனிதமுள்ள அகிலமே தோற்று நிற்கிறது உறவுகளுக்கிடையில் இடைவெளி கூடி உள்ள அன்பில் அநாதையாகி துறவிகள் போல ஒதுங்கிப்போனோம்

இப்பூமியிலே மனித அவதாரம் எடுத்த இயேசு பிரான் எதற்காக ஏழ்மைக்கோலம் பூண்டு எம்மைவிடத் தம்மைத் தாழ்த்தி மாடடையும் குடினில் அன்னை மரி தந்தை சூசையின் மகனாகப் பிறந்தார். பாலன் இயேசுவாக அவர் கொண்டு வந்த அமைதி சமாதானம், மனிதநேயம், உரிமை வாழ்வு எல்லாம் இப்பொழுது எங்கே?

மனிதம் இப்புவியினில் மதிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இயேசு இறை மகனாக இருந்தும் எம்மில் ஒருவராகி வாழ்ந்து, செயல் வடிவாக வாழ்விற்கு அர்த்தம் கொடுத்து, தம் பணிவாழ்வினால் எமக்கு முன்னுதாரணமாகி ஈற்றில் கல்வாரியில் தம் இன்னுயிரைத் தியாகம் செய்தார். இயேசுவின் பாதை தொடர தாம் பெற்ற வாழ்வின் வெவ்வேறு படிநிலைகளிலும், வடிவங்களிலும் அழைக்கின்றார்.

இன்றைய உலகம் நவீன போர்வை போர்த்தி நிற்கின்றது. அதற்கு உறவுகளும் தெரியாது, உண்மைகளும் விளங்காது. இந்தச் சூழ்நிலையில்தான் எமது இலக்கு நோக்கிய வாழ்க்கைப்படகு பல சவால்கள் நிறைந்த கடலில் நகர்கின்றது. இந்த உலகில் அனைவருமே சாதிக்கப் பிறந்தவர்கள். சாதிக்குப் பிறந்ததாயும், சாவிற்குப் பிறந்ததாயும், எண்ணி நம்மில் பலரின் வாழ்க்கைக் கனவுகள் கனவாகவே கலைந்து விடுகின்றது.

மன ஊக்கம் உணர்வாகிச் செயலாக வெளிப்படுகிறது என்கிறார் அறிஞர் வில்லியம் ஜேம்ஸ். ஊக்கமும் செயலும் ஒன்றாகவே பயணம் செய்கின்றன. நாம் பிறருக்கு வழங்கும் பாராட்டுக்கள், புன்னகை, பரிசுகள், உதவிகள், உடனிருப்புக்கள், மதிப்பளித்தல்கள் பிறரின் வாழ்வுக்கான வெகுமதிகளாகவும் ஊக்குவிப்புக்களாகவும் அமைகின்றது. நாம் எண்ணும் எண்ணங்கள் நல்லவையாக அமையும் போது அவை ஏதோ ஒரு வடிவில் எம்மை வந்தடைகின்றது.

நாம் பிறருக்கு வழங்கும் சிறிய புன்னகை கூட அவர்களின் தன்னம்பிக்கையை அதிகரிக்கின்றது. கவலைகளைப் போக்கிவிடுகின்றது. மன அழுத்தங்களை குறையச் செய்கின்றது. எனவே புன்னகையை பூட்டி வைக்காதீர்கள். அதைக் கொடுத்துப் பிறர் வாழ்வு மலர சிறிய புன்னகையால் உதவிடுவோம்.

பிறருக்கு நாம் வழங்கும் பாராட்டுக்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை. பிறரின் தேவையறிந்து பாராட்டப் பின்னிற்க வேண்டாம்.

தகுந்த நேரத்தில் பொருத்தமான ஊக்கம் பெற்றோரால் வழங்கப்படாத காரணத்தால் இன்று சமூகம் சீரழிந்து காணப்படுகின்றது. அரசிய லாயினும் சரி, கல்வியாயினும் சரி, விளையாட்டாயினும் சரி, தொழில்சார் நடவடிக்கையாயினும் சரி, தோல்விகள் கதவை மூடும்போது ஊக்குவியுங்கள். தட்டித் திறப்பதற்கான வெற்றியின் சாவிகள். நாம் எவ்வாறு பாராட்டுக்களையும், ஊக்குவிப்புக்களையும் எதிர்பார்க்கின்றோமோ அது போலவே பிறருக்கும் கொடுக்க முன்வருவோம்.

மனித உறவுகளுக்கிடையில் அன்பைப் பகிர முடியாமல் நவீன

அருட்பணி றோமலா அன்ரனி

தொழில்நுட்பம் எம்மை ஆட்சி செய்யும் காலமிது. அன்புக்காக ஏங்கும் மனித இனம் செல்லப் பிராணிகளை நோக்கிக் கவரப்படவும் நேரம் செலவழிக்கவும் இயல்பாகிவிட்டது. மனித பிறப்பின் மேன்மையை உணரமுடியாமல் பொருளாதார நெருக்கடிகளும், நோய் நிலைமைகளும், கலாசார சீர்கேடுகளும், நீதியற்ற ஆட்சி முறைகளும் எம்மை ஒடுக்குகின்றது. இந்நிலையில் மடிந்து போகும் மனிதத்தை மீளவும் நிமிர்த்துவதற்கு வழித்தெழுவோம். எம்மை நோக்கி நீட்டப்படுகின்ற கரங்கள் செழுமை மிக்கதாக இருக்க பார்த்துக்கொள்வோம்.

இந்தப் பூமி படும் துன்பங்கள் நீங்கி இயல்பான நிம்மதி கிடைத்திட வேண்டும் தளர்ந்திடாது வாழ்வின் எந்தத் தடையிலும் தண்ணொளி வீச சுகமாக வாழ்ந்திடனும் மானமிக்க மானிடத்தை உருவாக்குவதற்காய் மனம் வைத்து உழைப்பவன் தான் நிஜமனிதன் •

# கிறிஸ்து எனும் விடுதலையின் ஒளி

**'இதோ கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்: அக் குழந்தைக்கு அவர் இம்மானுவேல் என்று பெயரிடுவர்' (எசா 7:14)**



இயேசு எனும் சொத்து, உலகிற்கு இறைவனால் கொடுக்கப்பட்ட ஒப்பற்ற கொடை. துணிகளால் பொதிந்து கிடத்தப்பட்ட ஓர் அரிய பொக்கிசம். வரலாற்றின் 'ஒரே போக்கு' எனும் சிந்தனைக்கு முற்றுப்புள்ளியிட்டு, அடுத்த அத்தியாயத்திற்கு வித்திட்ட மாமேதை. மனித வரலாற்றையே இரண்டு கூறாகப் பிரித்த பிறப்பு என்றால் அது கிறிஸ்துவின் பிறப்பே. இயேசு பிறக்கும்போது எந்த உரிமையும் அற்றவராக, பார்ப்போர் பரிதாபப்படும் பாலகனாக இன்னொருவர் இடத்தில் அதிலும் மிருகங்களுக்குரிய இடத்திலேயே தடம் பதித்தார். அவருடைய தெரிவு ஏழ்மையின் தெரிவாக இருந்தது. அவருடைய பாதைகள் முட்கள் நிறைந்திருந்தன. மெசியாவை யூத மக்கள் கலாதிகாலமாக எதிர்பார்த்துக் காத்திருந்தாலும், இயேசுவின் பிறப்பின் நிகழ்வு நிகழ்ந்தபோது வேண்டப்படாததாகவும், ஏற்கத்தகாததாகவும் இருந்ததாக எமது நற்செய்திப் பாரம்பரியம் கூறுகின்றது. அவ்வாறு வெறுத்து ஒதுக்கப்பட்டவரின் பிறப்பை, இன்று உலகத்தார் அனைவரும் இன, மத, பேதமின்றி எதிர்பார்த்துக் காத்திருக்கும் விழாவாக மாறிவிட்டது.

கடவுளுடைய மீட்புத்திட்டம் யூதர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வன்று. யூதர்கள் தம்மை மார்புதட்டி, பெருமைபாராட்டி 'தேர்ந்தெடுக்கப்பட்ட இனம்' என்று துதிபாடுவதால், கடவுள் மற்றைய இனத்தாரைக் கைவிட்டு விட்டார் என்று பொருளில்லை. யூத இனம் மீட்புத் திட்டத்தில் ஒரு கருவியே. மீட்புத் திட்டத்தினை உலகினிலே பறைசாற்றவும், தன்னுடைய ஒரே மகனைப் பாரிற்கு அனுப்புவதற்காகவும் கடவுள் யூதர்களை வாகனமாகப் பயன்படுத்தினார்.

'பலமுறை பல வகைகளில் முற்காலத்தில் இறைவாக்கினர் வழியாக நம் மூதாதையரிடம் பேசிய கடவுள், இவ்வாக் கறுதி நாட்களில் தம் மகன் வழியாக நம்மிடம் பேசியுள்ளார்' (எபி 1:722) ஆதிப் பெற்றோர் செய்த பாவத்தின் விளைவாக முளைத்த சென்ம பாவத்திற்குப் பரிகாரமாக, தன் மகனைப் பலிப் பொருளாக அனுப்புவதற்காகக் கடவுள் செய்த முன் ஆயத்தமே குலமுதுவர்களும், யூத இனத்தாரும். ஆனால் பழைய இஸ்ராயேலர் கடவுளின் மீட்புத் திட்டத்தின் வலிமையையும், அதன் பெறுமதியையும் உணராது,

அருட்சகோ.பொ.டினுசன்

மீட்பைக் கொணர்ந்த மீட்பரையே சிலுவை மரத்தினிலே சரணாகதியாக்கியமையால் அவர்களின் அழிவு தொலைவில் இருக்கவில்லை. கி.பி 70ம் ஆண்டு ஜெருசலேம் ஆலயம் அழிக்கப்பட்டு, யூதர்கள் உலகம் பூராகவும் சிதறுண்டு போனார்கள். தற்போதைய புதிய இஸ்ராயேல், கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட இனம் எம் தாய் திருஅவையே. இதுவே கிறிஸ்து பிறப்பின் முழுமை.

உண்மையினிலே இன்று நாம் கொண்டாடும் மீட்பரின் பிறப்பு விழா மார்கழி மாதம் 25ம் திகதி என்பது, உரோமையர் தம் 'சூரியக் கடவுளுக்கு செலுத்திய விழாவே' இதை அவர்கள் 'வெல்ல முடியாத சூரியப் பிறப்பு விழா' என்றனர். காரணம் என்னவென்றால், அந்நாளில் தான் கடும் குளிரையும், பனியையும் போக்கி சூரியன் உதயமாகும் நாள். இதையே கிறிஸ்தவர்களும் பின்பற்றி, இருளை நீக்கி ஒளி கொணர்ந்த மாவேந்தன் பிறந்த தினமாகக் கொண்டாடத் தொடங்கினர். பழைய ஏற்பாட்டினிலே, காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டதுபோல, புதிய ஏற்பாட்டினிலே புதிய இஸ்ராயேலர் கிறிஸ்துவைப் பின்பற்றியோர் கிறிஸ்துவை 'விடுதலை வேந்தனாக, ஏழையின் நண்பனாக, ஒதுக்கப்பட்டவரின் தோழனாக, நொறுக்கப்பட்டவர்களின் நேசராகப் பார்த்தனர்.

'மானிட மகன் தொண்டு ஏற்பதற்கல்ல, தொண்டு ஆற்றுவதற்கும், பலருடைய மீட்புக்கு ஈடாகத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்'. (மத் 20:28) கிறிஸ்துவின் மனித அவதாரம் வரலாற்றில் இடம்பெற்ற திடீர் நிகழ்வன்று. அது ஏறக்குறைய 2000 வருடங்களாக ஓர் இனத்தின் ஊடாக நடைபெற்ற உண்மைச் சரித்திரம். இது ஓர் இனத்தையோ அல்லது அதிகார வர்க்கத்தையோ மீட்பதற்காக இடம்பெற்ற வரலாற்று நிகழ்வல்ல. இது மானிடர் அனைவரையும் கடவுள்பால் கொணர மேற்கொள்ளப்பட்ட நிகழ்வு.

ஓர் அறிஞர் அழகாகக் கூறுவார்

(தொடர்ச்சி 13 ம் பக்.)

# இயேசுவின் மானிட ஏற்பு விழாவும் கோவிட் - 19 இன் தாக்கங்களும்

**முன்னுரை**

மீண்டுமொருமுறை கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண் டாட ஆயத்தமாகின்றோம். சிலர் கிறிஸ்து பிறப்பு விழாவைச் சமகாலச் சூழலில் கொண்டாட முடியுமா? நம்பிக்கையற்ற சூழல், பொருளா-தார நெருக்கீடுகள், புதிய திரிபின் அச்சங்கள் மத்தியில் இப்பிறப்பு விழாவைக் கொண்டாட முடியுமா என்ற ஆதங்கம் எம்மத்தியில் எழாமலில்லை. எனினும் இத்தகைய ஒரு சூழலில்தான் நாம் கிறிஸ்து பிறப்பு விழாவை அவரது மானிட ஏற்பை எளிமையான முறை யில் கொண்டாட வேண்டும்.



கிறிஸ்து பிறப்பு விழா எப்போதுமே எமக்கு நம்பிக்கையின் விழாதான். ஆனால் அதை ஆடம்பரங்க ளோடும், வெளியலங்காரங்க ளோடும் கொண்டாடியதால் அதன் அர்த்தத்தைச் சிலவேளை-களில் நாம் இழந்திருக்கலாம். தொடர்ச்சியான கோவிட் சூழலில் எப்படிக் கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தத்தோடு கொண்டாடலாம் என்பதே எமது சிந்தனைக்கு வருகின்றது. கிறிஸ்து பிறப்பு விழா ஒரு எளிமையான விழா

கிறிஸ்தவ பாரம்பரியமும் கிறிஸ்துவின் பிறப்பு எவ்விதம் வரலாற்றில் நிகழ்ந்தது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. கிறிஸ்துவின் பிறப்பையொட்டிய நிகழ்வுகள் எல்லாம் இயேசுவின் மானிட ஏற்பை எளிமையான பிறப்பாகவே சுட்டிக் காட்டுகின்றது. ஏன் நாம் அதை மறந்து ஆடம்பரங் களுக்குள்ளும், வெளியரங்க ஆயத் தங்களுக்குள்ளும் முடக்கி, எளிமை யான விழாவை ஆடம்பர மாயைக் குள் மறைத்து வைத்துக் கொண்டாடி னோமா என்ற சிந்திக்கத் தோன்று கின்றது. கோவிட் -19 இன் சமகாலச் சூழமைவுகள் ஒரு எளிமையான வாழ்க்கை முறையைக் கற்றுத் தந்துள்ளது.

கொரோனாச் சூழல் கட்டுப் பாடுகள் எம் தேவைகளைச் சுருக்கி வாழவும், இருப்பதைப் பகிர்ந்து வாழவும் பயிற்றுவித்துள்ளது. இயேசுவின் மானிட ஏற்பே அவரது தாழ்ச்சியையும், எளிமை யையும் வெளிப்படுத்துகின்றது. கடவுள் மனிதனாக மண்ணுலகில் உருவெடுத்து மானிடரோடு உறவு கொண்டதுதான் மானிட ஏற்பின் அடித்தளமாகும். மாட டைக் குடிலில் வருடா வருடம் பிறக்கும் இயேசுவை இன்று கொரோனாவின் தாக்கத்தினால் மானிடத்தை இழந்து, மனித மாண்பைத் தொலைத்து வாழும் இயேசுக்களோடு எம் வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும்போது நாம் வாழும் சமூகங்க ளில் இயேசுவின் மானிட ஏற்பிற்குச் சான்று பகர்கின்றோம். எளிமையில் பிறந்த இயேசுவை இன்று கோவிட் -19 இன் தாக்கத்தால் ஏழைகளாக, வறுமை யிலும், வெறுமையிலும் வாழும் மனித ரைத் தேடி அவர்களது வாழ்வில் நம்பிக்கையூட்டும்போது, இயேசுவின் மானிட ஏற்பு தெருவில் வந்து நிற்கின் றது. ஆலயங்களில், மாடடைகுடில்களில் இயேசுவை அலங்கார விளக்குகள் மத்தி யில் தரிசித்தது போதும். கொரோனாக் காலமானது ஆலயங்களுக்கு வெளியே தான் கடவுளை அடையாளம் காட்டி வரு கின்றது. துன்புறும் நமது சகோதர, சகோ தரிகளில் இயேசுவின் மானிட ஏற்பை நாம் கண்டு கொள்கின்றபோது, கிறிஸ்து பிறப்பு விழா எளிமையான விழாவாக மாறிவிடுகின்றது. கிறிஸ்துவைப் போன்று எம்மை வெறுமையாக்கி வாழ அழைப்பு விடுக்கின்றது.

**இயேசுவை இன்று எங்கு தேடுகின்றோம்?**

இன்று கோவிட் -19 வைரசின் திரிபுகள் பொருளாதார நெருக்கீடுகள், வறுமை எல்லாமே எமது வாழ்க்கை யைப் பாதித்துள்ளது. இன்று இதன் விளைவாக எம் தேடல்கள் எல்லாம் திசை மாறிவிட்டன. குறிப்பாக வாழ்க்கை இன்று ஒரு போராட்டமாக, மன அழுத் தங்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலையில் இனம்புரியாத அச்சங்களோடு சென்று கொண்டிருக்கின்றது. இதன் விளைவாக எதைத் தேடுவது என்று தெரியாமல் அங்கலாய்த்து வாழும் இக்கட்டான நிலையில் வாழ்கின்றோம்.

கொரோனாவின் தாக்கமானது எதுவும் நிரந்தரமில்லை என்ற உண் மையை அடிக்கடி நினைவுபடுத்துகின் றது. பட்டம், பணம், புகழ், தேடியலைந்த வர்களால் உயிரைக் காத்துக்கொள்ள முடியவில்லை என்பது ஒரு கசப்பான உண்மையாகும். அன்று எளிமையான இடையர்களால் தான் இயேசுவை மெசியாவாகக் கண்டுகொள்ள முடிந்தது. எளிய உள்ளத்தினருக்கே ஆண்டவரின் தரிசனம் கிடைக்கின்றது. இன்று கொரோ னாத் தாக்கத்தினால் எமது தேடல்களை மீளாய்வு செய்யவேண்டிய நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளோம். ஏன் ஞானி களும்கூட மண்ணக செல்வங்களை விட, விண்ணகச் செல்வமாகிய மெசியா வையே தேடிக் கண்டடைந்து சென் றார்கள். கோவிட் -19 இன் தாக்கங்கள் நாம் விண்ணக செல்வங்களையே முதலில் தேட வேண்டும் என்பதைக் கற்றுத் தந்துள்ளது.

இன்று பிரமாண்டங்களை, ஆடம்பரங்களை, தற்பெருமைகளைத் தேடுவதை விடுத்து சிறிய பிறரன்புச் செயல்கள் செய்வதில்தான் கடவுளைக் காணமுடியும் என்பதை இக்கிறிஸ்து பிறப்பு விழாக் காலம்உணர்த்துகின் றது. இன்று பணம், புகழ்,நுகர்வுத் தேவைகளின் பின்னால்செல்லாமல், உறவுகளை இரக்கத்தை, அன்பைத் தேடிச் செல்லும் காலமாக மாற்றிட கொரோனாவின் தாக்கங்கள் எம்மை நெறிப்படுத்துகின்றன.

இன்றைய கொரோனாச் சூழலில் திட்டமிட்டு எதுவும் செய்ய முடியாத நிலையில். இக் கிறிஸ்து பிறப்பு விழாக்காலத்தில் வறுமை யில் வாடுவோரில், துயருறுவோரில், தனிமையில் இருப்போரில் இயேசு வைத் தேடன் கொரோனா வழி சமைத்துள்ளது. இது ஒரு விதத் தில் ஆசீராக (Blessing in disguise) எம் வாழ்க்கையில் கருதவேண்டும். கொரோனாக் காலமானது உயிரி ழப்புக்களைப் பாதிப்புக்களைக் கொடுத்திருந்தாலும் எம் அகக் கண் களைத் திறந்துள்ளது உண்மையை, நிலையானவைற்றை, மானுடத் தின் இருப்பை தேர்ந்து தெளிந்து கொள்ள, உண்மைக் கடவுளை எங்கு தேடவேண்டும் என்பதை எமக்கு உணர்த்தியுள்ளது.



அருட்பணி ஸ்ரனி அன்ரனி (அமதி)

**மானுட ஏற்பு ஒன்றிப்பிற்கு (Synodal) வழிசமைக்கும்**

மானுட ஏற்பின் ஆணிவேராக அமைவது ஒன்றிப்பு என்று சொன் னால் மிகையாகாது. கடவுள் தன் மையில் விளங்கிய அவர் மனுவுருவெடுத்து மனித குலத் தோடு ஒன்றித்த நிகழ்வைத்தான் கிறிஸ்து பிறப்பு விழாவாகக்கொண் டாடுகின்றோம். மனிதகுலத்தின் மீட்பைத்தான் கிறிஸ்து பிறப்பு விழாவாகக் கொண்டாடுகின்றோம். மனித குலத்தை மீட்கவே மனித நிலைக்குள் புகுந்து, பாவம் தவிர மற்ற அனைத்திலும் மனிதனோடு இரண்டறக் கலந்து வாழ்ந்தமீட்பின் தொடக்கமாகவே கிறிஸ்துவின் பிறப்பைக் கருதுகின்றோம்.

இவ் ஒன்றிப்பு இல்லாதவிடத்து கடவுள் திட்டப்படி மனித குலத்தை

(தொடர்ச்சி 15 ம் பக்)

## கிறிஸ்து எனும்...

(12 ம் பக்கத் தொடர்ச்சி)

*'கிறிஸ்து பிறப்பு பொருளற்றதாயிருக்கும் அவருடைய இறப்பு இல்லாவிட்டால். அவருடைய இறப்பு பொருளற்றதாயிருக்கும் உயிர்ப்பு இல்லாவிட்டால், அவரு டைய உயிர்ப்பு பொருளற்றதாயிருக்கும் அவர் விண்ணேற்றம் அடையாவிட்டால்'* என்று அவர் தனது சொந்த வீடாகிய விண்ணகம் திரும்பி, தன் தந்தையை மாட்சிப்படுத்திக் கொண்டிருக்கிறார். புதிய இஸ்ராயலராகிய நாம் அவருடைய இரண்டாம் வருகைக்காக எம்மைத் தயார் செய்து கொண்டிருக்கின்றோம்.

கிறிஸ்துவின் பிறப்பைப் பெரும் விமரிசையாகக் கொண்டாட இருக்கும் நாம், எம்மை நோக்கி ஒரு கேள்வியை எழுப்புவோம். உண்மையிலே கிறிஸ்து மனித அவதாரம் எடுக்காதுஇருந்திருந்தால் என்னை நடந்திருக்கும்? நாம் மூட நம்பிக்கையில் முடங்கிப் போயிருப்போமா? பாவச் சேற்றுக்குள் எம்மை மழுங்கடித்திருப் போமா? துன்பம் எனும் அவல நிலைக்குள் தள்ளப்பட்டிருப்போமா? மீட்பு எனும் உன்னத ஒளியைக் கண்டிருப்போமா? சற்றுச் சிந்திப்போம். உண்மையினிலே, நாம் அனைவரும் மீட்புப் பெறாமலே மாண்டிருப்போம். அவ விசுவாசத்திற்கு அடிமை யாகி அறியாமை எனும் இருளை எமதாக்கியிருப்போம். மனித வர்க்கம் பாவம் எனும் நெருப்புச் சுவாலைக்குள் சிக்கி அஸ்தியாகியிருக்கும். இத்தனைக்கும் மா-றாக கிறிஸ்து இயேசு எனும் ஒளி அன்று பெத்லேகேமினிலே மாட்டுத் தொழுவத்தி னிலே உதித்தது: எம் ஒவ்வொருவரினதும் மனித மாண்பை உயர்த்தவும், அடிமை யாளனாக அல்ல கிறிஸ்துவின் அன்புச் சீடராக எம்மை மாற்றவுமே.

விடுதலையின் தேவன், தனது பிறப்பிலேயே ஏழையாகப் பிறந்து தன்னை அனைவருக்கும் பொதுவான ஒருவர் என அடையாளப்படுத்துகிறார். உணவு இருக்கும் தீவனத் தொட்டியினிலே பிறந்த இயேசு, தான் அனைவருக்கும் முடிவற்ற தும், உன்னதமானதுமான உணவாகப் போகின்றார் என்பதை முன்கூட்டியே தனது பிறப்பில் சுட்டிக் காட்டுகிறார். கிறிஸ்து தனது பிறப்பின் முழுமையைத் தனது வாழ்வினால் எமக்கு உணர்த்தி நின்றார்.

ஏழைகளின் ஏழையாக, அடிமையிலும் அடிமையாக, பாவிகளின் நண்பனாக வாழ்ந்தவன் மூலம் நாம் இன்றும் அவரின் பிறப்பை நல்மனதுடன் கொண்டாடுகின்றோம். எம் விடுதலையின் வேந்தனின் பிறப்பு விழாவை ஏழை எளிய, துன்பப்படும், அன்னியப்படுத்தப்பட்ட அடக்கி ஆழப்பட்ட மக்கள் மத்தியில் கொண் டாட தவறுவோமாகில், எமது கிறிஸ்மஸ் விழா கிறிஸ்து இல்லாத விழாவாகவே காணப்படும்.

## 2023 ஒக்ரோபரில் உரோமையில்...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வத்திக்கான் சங்கம் தனது மக்களின் ஒளி (Lumen Gentium) என்னும் திரு அவை பற்றிய கோட்பாட்டு ஏடு எண் 12இல் பின்வருமாறு கூறுகிறது. தூயவரான கடவுளால் அருட் பொழிவு பெற்று, நம்பிக்கை கொண்டோர் அனைவரின் கூட்டம் தன்நம்பிக்கை யிலே தவற முடியாது. நம்பிக்கை அறநெறி ஆகியவை பற்றி, ஆயர் முதல் பொதுமக்க ளில் இறுதியானவர் ஈறாக, அனைவரும் தம் பொதுக்கருத்தைக் காட்டும் போது, மக்கள் அனைவரின் இயல்பு கடந்த நம்பிக்கை உணர்வினால் இத்தனிப்பண்பு வெளிப்படுகிறது. திருத்தந்தை கூட்டொருமித்த இயக்கத்தை அழைப்பதன் ஊடாக அவர் முயற்சிப்பது என்ன வென்றால் நம்பிக்கையாளரின் இயல்பு கடந்த நம்பிக்கையையும் (Sensus Fidelium), வழுவாவரம் பற்றிய எண்ணக்கருவையும் முழுத்திரு அவையையும் உள்ளடக்கத் தூண்டுதல் தந்து ஊக்குவித்து செயல்படுத்துகிறார். திருத்தந்தையின் அழைப்பு என்னவென்றால் ஒருமைப்பாட்டின் ஒரே திருஅவையாக அணிதிரளவும், ஒருவர் மற்றவர்க்கு செவிமடுக்கவும், உலகின் உள்ளே இறையாட்சியின் ஒளியாகவும் உப்பாகவும் திகழ வழிசெய்யவும். நவீன உலகில் பொதுப்பணியில் பங்கு பெறவும் ஒன்றாகச் செய்வதாகும். பங்குத்தள மறைமாவட்ட ரீதியான கூட்டொரு மித்த பயணத்தின் வெற்றிக்கு இணைந்து மன்றாடுவோம் இணைந்து பங்கேற்போம்.

# காவியத்தில் யேசுவின் பிறப்பு

## அமைதியைக் காணாது அல்லலுறும் தமிழரின் பெரும் சுமை நீக்கித் தூங்கிடுவாய் தாலேலோ

**அ.நிக்ஸன்**

எங்குமே பரவி எங்கணும் விளங்கும் யேசுவின் வாழ்க்கையைத் தொகுத்து இவ் வண்ணம் தமிழில் தந்து வைத் தேன் யான் என்று தனது இறுதிக் காவியமான இயேசு காவியத்தில் பகரும் கவிஞர் கண்ணதாசன் எத்தனை உண்மை வந்து பிறந்தது யேசு பிறப்பிலே என்று மங்களத்தில் உரைக்கின்றார். இறந்தும் வாழும் கவியரசரின் இறவாக் காவியத்தில் வரும் பிறப்பு என்னும் முதல் பாகத்தில் மட்டும் யேசுவின் பிறப்பினை நினைவு கூரும் இந்த வேளையில் எடுத்து நோக்குவோம்.

**பெற்றோர் சிறப்பு**

மங்களத்துது எனும் பகுதியில் கண்ணதாசன் தனது கைவந்த கலையான வர்ணிப்புத் திறனுக்குள் மரியன்னையை உள்ளடக்குகின்றார்.

**'நிலவெனும் வதனம் நெற்றி நெடு மழை-யனைய கூந்தல் மலரெனும் கண்கள் மரியன்னை அழகின் தெய்வம்'**

என்று மரியாளின் களங்கமற்ற குளிர்மையான ஒளிவீசும் முகத்தினையும் மென்மையான மேனியையும் சாந்தமான கண்களையும் கூறி மொத்தத்தில் அழகின் தெய்வம் எனக் கூறுகின்றார்.


இதிலிருந்து மரியாள் அழகுக்கு மாத்திரம் அல்ல- தெய்வமல்ல- தெய்வத்தை ஏற்றுக் தாய்மையைப் போற்றும் தகுதியானவள் என்பதனை நாம் உணரக்கூடியதாக உள்ளது.

'தன்னிகர் இல்லாததான தாவீது வம்சம் சார்ந்த பொன்னிகர் சூசையப்பர்' எனும் அடிகள் மூலமாக மரியாளின் கணவன் யேசுவின் தந்தை சூசையப்பரின் தாவீது குலத் தனிப்பெருமையை எடுத்தியம்புகிறார் கண்ணதாசன். மாதாவை மாதருள் மணியாகவும் தந்தை சூசையை மாந்தருள் தனித் திறனாகவும் காண்பிப்பதன் மூலம் பிறக்கும் யேசுவின் பெருமைகளை எடுத்துரைப்பதைக் காணலாம்.

**'யேசு என்கின்ற பேரைப்
பாலூடன் ஊட்டிச் சூட்டிப் பாவிகள்
பாவம் தீர்க்கச் சில மிக்கோனாய்
என்றும் வளர்த்துவா சிறக்கக்
காண்பாய்'**

தேவதூதன் மரியாய்க்கு உரைக்கும் வார்த்தைகளில் தாய்மைப்பணியின் தூய்மையும் எடுத்துக் கூறப்படுவது போல் 'பாலூட்டிச் சூட்டி' எனும் வரி காட்டி நிற்கின்றது. 'தோண்டிய இடத்தில் தண்ணீர் சுரப்பதுபோலத் தன்னைத் தீண்டிய செய்தி கேட்டு திருவுளம் மகிழ்ந்த பாவை' என்னும் உவமையணி இறைவ-னின் வார்த்தையை மரியாள் தடையின்றி ஏற்றதை எமக்கும் தடையின்றிக் காட்டப்பயின்ற சொற்றொடராகும்.

'ஆண்மகன் என்று அவன் பெற்றெடுப்பான் இனிய அம்மகனை யேசு என்றழைத்துத் தனிப் பெரும் வாழ்க்கை நடத்துவீர்' என்ற அடிகளின் இனிய உம்மகவு என்று சொல்லாமல் இனிய அம்மகவு என்று சொல்லுவதன் மூலம் பிறக்கும் பாலகனுக்குத் தந்தையார் நீரல்ல அதை வளர்க்கும் பொறுப்பே உம்முடையது எனச் சொல்லாமல் சொல்லுவதன் ஊடாகக் கண்ணதாசனின் கவி வல்லமையைக் காணமுடிகின்றது




என்னாதவாறு இருகரம் விரித்து நின்றான்' உயர்வானதொரு கருத்தினை கொடுத்துள்ளார் கண்ணதாசன்.

வெற்றியின் சின்னமாக விரிந்து நிற்கும் யேசு பாலனின் முகத்தின் முன்னே மாணிக்கத் தொட்டிலென்ன மாளிகைச் செல்வமே தோற்றுப் போகும் விண்ணரசின் மகிந்தன் இறைவனின் மைந்தன் இறையரசின் செய்தியினைக் கூற வந்த யேசு பிரானின் மண்ணுலக மகிமையைக் கவியரசர் 'நாழிகை செல்லச் செல்ல நல்லொளி மேலும் பல்கும்' என்பதன் மூலம் பிறப்பின் போதே பிற்காலச் சிறப்பைத் தெளிவாகக் காட்டுகின்றார்.

**தாலேலோ**

ஏக்கத்தோடு தூங்குகின்ற மா-னிடர் வாழ்வில் கவ்விய இருளகற்றும் செவ்விய சுடரொளியாய் வந்த தோன்றி வந்தாய் தாலேலோ' என்ற அடிகள் மூலம் தருகின்றார் கவிஞர்.பாவத்தின் சேற்றினிலே சிக்கிச் சுழலும் மனித குலத்தின் ஆபத்தினை நீக்கிவிட தக்க தருணத் தில் வந்துதித்தவர் இறைமகனார் என்பதனை 'மாரியிலே மழை பொழிந்து மக்களினம் வாழவைக் கும் காரியம்போல் உன் தந்தை காலத்தே அனுப்பி வைத்தார்.' என்ற பாடல்வரிகள் ஊடாக தெளிவாக எடுத்துக் காட்டுக்காட்டுகின்றார் கவிஞர்.

நாடாளும் மன்னனின் மாணிக்கத் தொட்டிலுக்கு கிடைக் காத மாபெரும் வாய்ப்பொன்று இந்த மாடு வாழும் தொழுவதற்திற்குக் கிடைத்து விட்டது. நாடாளும் மன் னன் கை அல்ல நாட்டில் வாழும்

மக்களுக்காகவே வந்து பிறந்த எளிமைக் கவிஞர் 'மாணிக்கத் தொட்டிலுக்கு வாய்க்காத பெருமை யெல்லாம் ஆநிரைத் தொழிவி னுக்கு ஆரளித்தார் எங்கோவே' என்று வினாவிலேயே விடைய ளிக்கின்றார்.

கைக்கோல் இன்றி வைக்கோல் மீதிலே வந்துதித்த இறையரசின் எளிமையைக் காட்ட வந்த கவியரசர் 'மாளிகை யும் இல்லை மஞ்சமுமில்லை என்றாலும் ஏழைத் தொழிவில் வந்த இறை மகனே தாலேலோ என்று அமைதியாக இசைக்கின் றார்.

அடிமைப்பட்ட மானிடர் வாழ்வில் சுந்தரச் சுடரினை ஏற்றி வைத்து இறையரசின் மகிமையை எடுத்தியம்ப வந்த இரட்சகன் யேசு பாலகனுக்கு இந் நாளில் கவியர சர் பாணியிலே நாங்களும் பாடி நிற்போம்.

**பாலன் பிறப்பு**

உலகினை மீட்பதற்கு மெசி யாவை அனுப்புவேன் என்று இறைவ னின் வார்த்தை கேட்டு மக்கள் ஆயிர மாயிரம் ஆண்டுகளாக அந்த மெசியா வின் வருகைக்காகக் காத்திருந்தனர்.

அவ்வாறு காத்திருந்த இதயங்களுக்குக் கிடைத்த பெரும் புதையலே யேசு என்பதனைக் கண்ணதாசன் 'ஆயிரம் காலம் தேடியலைந்து தோண்டியெடுத்த தோன்றாய்ப் பொருள்' என்கிறார். மேலும் பாலனின் பிறப்பினைக் கூற வந்த கவிஞர் தன் உருவச்சிறப்பினுள் யேசு பாலனையும் உட்புகுத்தி விட்டார். 'பொன்னாளி மாலை புகழுடன் பணிந்து மின்னலின் பிழம்பாய் மேனி வடித்து தன்னொளி பரப்பும் தகைசால் மைந்தனை கண்ணால் கண்டு களித்தனர் ஆயரே' என பாலனைப் புகழந்தது சாலவும் பொருத்தமே.

'மெல்லிய பட்டுப்போன்ற தூய வள் மரியாள் கையில் மெல்லிய பாலன் யேசு விளக்கென புன்னகைத்தான்' என்று கூறும் கவிஞரின் பாடல் வரிகள் மரியாளின் தூய உருவத்தோடு மென்மை தாங்கிய கள்ளமில்லா வெள்ளை உள்ளத்தைக் காட்டுகின்றது. 'விளக்கென புன்னகைத்தாள்' எனும்வரி யேசு பாலனின் முகத்தில் படர்கின்ற இடர்போக்கும் சுடர் போன்ற புன்னகையைக் கூறுவதோடு 'யேசுவே உலகின் ஒளி' என்பதனையும் ஒளிவு மறைவின்றிக் காட்டுகின்றார் கண்ணதாசன்.

பூமியில் பிறந்த பிள்ளை தன் இரு கைகளையும் விரித்து மகிழ்ச்சி பொங்க விளையாடுவது இயற்கையே. ஆனால் யேசு பாலன் விரித்த கையோடும் சிரித்த முகத்தோடும் வைக்கோலின் மீது விளையாடும் காட்சியினைக் கவிஞர் 'இல்லை



ஏந்தல் யேசுவினைத் தூங்க வைத்த எளிய மக்கள் பாணியிலே தாலாட்டுப் பாடுகின்றார். கவிஞர் கண்ணதாசன். 'சோதி மணிப் பெட்டகமே சுடரொளியே தாலேலோ' என்று தொடங்கி 'வானளந்த திருக்குமாரா மனித குல மருத்துவனே' என்று தொடர்கின்றார். நோயுற்றவனுக்கு மருத்துவம் தேவை என்ற யேசுவின் பிற்காலக்குரல் கண்ணதாசனின் பிறப்பின்போதே தாலேலோப் பாடலில் தொனிக்கின்றது.

பூமியில் பிறந்த பின்னர் வரலாறுகள் படைக்கும் பெரியோர்கள் வரிசையிலன்றி பிறக்கும் முன்னமே வரலாறு கண்டவர் யேசு என்பதனை 'அந்தாளில் சான்றோர்கள், ஆன்றோர் கள், பெரியோர்கள் சொன்னபடி மீட்பதற்கு

**அமைதியைக் காணாது அல்லலுறும்
ஈழத்தமிழர்பெரும் சுமை நீக்கித்
தூங்கிடுவாய்
சுந்தரனே தாலேலோ**

### கிறிஸ்துமஸ் மரம்

கிறிஸ்மஸ் மரம் வைக்கம் பழக்கம் தோன்றுவதற்கு ஸ்காண்டிநேவியர்கள் தான் காரணம். இவர்கள் கிறிஸ்துவை வழிபடுவதற்கு முன்னர் மரங்களை வழிபட்டனர்.

அவர்கள் மனம் மாறிய பின்பு பண்டிகைத் தினங்களில் மரங்களை அலங்கரித்தனர். 1841 ஆம் ஆண்டு இங்கிலாந்து இளவரசர் ஆல்பர்ட் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மரத்தைக் குழந்தைகளுக்கு அறிமுகப்படுத்தினார்.



அது முதல் இது உலகெங்கும் வேகமாகப் பரவியது. கிறிஸ்மஸ் மரம் என்பதற்கு பசுமை மாறாத மரம் என்று பொருள். சீர்திருத்த வாதியான மாட்டின் லூதர் என்பவரால் 16ம் நூற்றாண்டில் ஊசி மலை மரமானது அலங்கரிக்கப்பட்டு கிறிஸ்மஸ் மரம் உருவாக்கப்பட்டது.

## ஆண்டவர் அழைப்பின் 1ம் ஆண்டு நினைவு கூரல்

தோற்றம்
20 . 08 . 1963



மறைவு
28 . 12 . 2020

அமரர்
**திரு. சிவா சந்தானம்**
(அன்ரன் றாச்)
ஓய்வு பெற்ற பொலிஸ் திணைக்கள ஊழியர்
யாழ்ப்பாணம்

அனைவரையும் ஆதரிப்பாய்
பக்குவம் பல சொல்லிடுவாய்
இப்போது அவை கேட்க
நீ இங்கு இல்லையப்பா

மனத்தோடு போராடும்
மறையாத ஞாபகங்கள்
நீர் விழ்வதோடு உம் நினைவு
என்றென்றும் மாறாது மறையாது

மாரீசன்கூடல்
இளவாலை

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவு

மண்ணகம்
16 . 09 . 1929



விண்ணகம்
29 . 12 . 2020

அமரர்
**லோப்பு கொஸ்ரின் நீக்கிலஸ்**

"கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை" (உரோ.6:10)

இல. 06, ஓடக்கரை வீதி
யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்

## விண்ணக வாழ்வின் 10ம் ஆண்டின் நினைவலைகள்

வல்லையில் தாய் மடியில்
12 . 07 . 1942



பேரின்ப வான் வீட்டில்
22 . 12 . 2011

அமரர்
**வைத்திய கலாநிதி**
**மரிசலீன்பிள்ளை மரியதாசன் (JP)**
(பேரின்பம் – வல்வெட்டித்துறை)
சுகாதார வைத்திய அதிகாரி M.O.H
யாழ் மாநகரசபை (2001-2011)

எம்மைக் கண்களாய் காத்து
கரங்களில் ஏந்தி
கனிவோடு பேசி
அன்பால் அரவணைத்து எமக்காக
உடலை உருக்கி
நாம் வாழ வழிசமைத்து
கடமையின் வடிவமாய்
வைத்தியராய்
இறைவழி நின்று
உன்னதமாய் வாழ்ந்த
உண்மை அன்பின் ஒளியை
எங்கள் அப்பாவை
இன்னும் தேடுகின்றோம்
எங்கு சென்றீர்கள்?
ஏன் அப்பா
எம்மைப் பிரிந்தீர்கள்

ஆவே மரியா
72 கோயில் வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

கண்ணீர் மல்க
குடும்பத்தினர்

## 25ம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
15 . 08 . 1922



இறப்பு
26 . 12 . 1996

அமரர்
**திரு. வலத்தி ஞானம்**
நீர்வேலி பரலோகமாதா வீதி.
'என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11:25)

ஆயிரம் உறவிருந்தென்ன எம்மை அரவணைக்க
ஆயிரம் உள்ளமிருந்தென்ன எம்மை நினைக்க
'ஐயா' என்றழைக்க நீங்களில்லையே!
அன்பின் ஊற்றாய் பணிவின் இருப்பாய்...
உண்மையின் மறுஉருவாய்
எம் குடும்பத்தின் தூணாய்
வழிகாட்டியாய் வாழ்ந்தீரே
இருபத்தைந்து ஆண்டுகளின் எத்தனை
ஆண்டுகள் கடந்தாலும் - எம்
இதயத்தில் உம் நினைவுகள்
என்றுமே அழியாது
இறைவனின் அமைதிபெற இறைஞ்சி நிற்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
மகன் : மரியகொறற்றி
பேரன் யே.அன்ரன் யேந்திரன்

**கத்தோலிக்க ஆயர் பேரவை...**
(2ம் பக்கத் தொடர்ச்சி..)
சூழ்நிலைகள் மீது எச்சரிக்கையாக இருப்பதும் எமது கடமையாகும். அமைதி ஏற்பட வேண்டுமாயின் சமூக - பொருளாதார சமத்துவமின்மையும், அநீதிகளும் சரி செய்யப்பட வேண்டும். ஏனெனில் நீதி இல்லாமல் உண்மையான சமாதானம் நிலவாது. நத்தார் எம்மை நம்பிக்கையின் தூதுவர்களாகவும் வாழ அழைக்கிறது. குறிப்பாக வசதி வாய்ப்புக்கள் குறைந்த மக்களின் வாழ்க்கையில், பலவிதமான சமூக, பொருளாதார, அரசியல் காரணிகள் ஒரு நிச்சயமற்ற தன்மையை உவாக்க செல்வாக்கு செலுத்துகின்றன.

எமது விசுவாசிகள், எமது குடிமக்கள் மற்றும் நல்மனங் கொண்ட அனைத்து சகோதர சகோதரிகளுக்கும் ஆசீர் நிறைந்த மகிழ்ச்சியான கிறிஸ்து பிறப்பு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொகிறோம் என கத்தோலிக்க ஆயர்

**திருத்தந்தையின் ...**
(1ம் பக்கத் தொடர்ச்சி)
புனித பிரான்சிஸ்கு அசிசியார் கண்ட காட்சி போல முழுப் பிரபஞ்சமும் ஒருங்கிணைந்து புகழ்பாடுவதில் கிறிஸ்மஸ் அழகு மேலும் மேலும் பிரகாசிக்கும். எளிமையும், மனித நல்லுறவும் வளர்க்கப்பட வேண்டும். கிறிஸ்மஸ் அழகு நாம் செய்யும் சிறிய அன்புச் செயல்களில் மிளிரவேண்டும்.

# இயேசுவின் மானிட ஏற்பு....

(.... ம் பக்கத் தொடர்ச்சி)
மீட்டிருக்கவே முடியாது. இப் பின்புலத்தில் கொரோனாக் காலமானது சமூக இடைவெளியை ஒரு சுகாதாரக் கட்டுப்பாடாக ஏற்படுத்தியிருப்பது உடல் இடைவெளிக்காக (Physical Distance) என்பதைத் தெளிவாகப் புரிந்திருக்கின்றோம். கொரோனாக் காலக் கட்டுப்பாடுகள் குடும்பங்களில் நாம் ஒன்றித்திருக்கவும், அடுத்திருப்பவரோடு எம்மிடமுள்ளதைப் பகிர்ந்து ஒன்றிக்கவும் வழி சமைத்தது என்பதை மறுக்க முடியாது.

கடவுள் நம்மைத் தேடி வந்திருக்கின்றார் என்பதே கிறிஸ்து பிறப்பு விழாவின் மையப் பொருளாகும். கடவுளே மனித உருவில் தன்னைத் தாழ்த்தி நம்மோடு ஒன்றிருந்திருக்கும்போது நாம் ஏன் ஒன்றிப்பில்லாமல் பாகுபாடுகளுடனும், வேறுபாடுகளுடனும் வாழ்கின்றோம்?

உள்ளத்தளவில் ஒன்றிப்பில்லாமல் பகைமை, சுயநலம், தற்பெருமை, பாராமுகத்தன்மை போன்ற மன நிலைகளோடு அடுத்திருப்பவரோடு ஒன்றிக்க முடியாமல் வாழ்கின்றோம் என்பது கசப்பான உண்மையாகும்.

கொரோனாச் சூழலில் தேவைகளைச் சுருக்கி, வெறுமையில் வாழவும், இருப்பவற்றை இல்லாதவர்களோடு பகிர்ந்து வாழவும் கற்றுக் கொண்டோம். கொரோனா கற்றுத்தரும் பாடங்களை நாம் சமூகமாக ஒருவரையொருவர் சார்ந்து வாழவும், உள்ளத்தளவில் ஒன்றித்து அன்பிய வாழ்வை வாழவும் ஓரளவு பயிற்றுவித்துள்ளது என்று கூறலாம். சமூக இடைவெளி இக்காலத்தில் கொரோனா வைரசின் தாக்கத்தால் பேணப்பட்டாலும், உள்ளத்தளவில் இடைவெளிகளைக் குறைத்து குறிப்பாக இக் கிறிஸ்து பிறப்பு விழாக் காலத்தில் துயருறுவோருடனம், வறுமையில் வாழ் வோருடனும் தனிமையில் இருப்போருடனும் ஒன்றித்து வாழ்வதன் மூலமே கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்த முள்ளதாக இக் காலச் சூழலில் கொண்டாட முடியும்.

அடிப்படையில் எமது வாழ்க்கைக்கு உண்மையான மனமாற்றம் தேவைப்படுகின்றது. கிறிஸ்து பிறப்பு விழாக் காலத்தில் உறவுகளைச் சீர்செய்வதிலும்,ஏழைகளுக்கு உதவுவதிலும், பகிர்ந்து வாழ்வதிலும் முனைப்போடு நாம் செயற்பட முயற்சிக்கின்றபோது 'ஒன்றித்து பயணிக்கும் திருஅவையின்' பயணத்தில் (For a Synodal Church) இணைந்து கொள்கின்றோம்.

நாம் அடுத்திருப்பவரோடு சிறிய வழிகளிலாவது எமது ஒன்றிப்பை வெளிப்படுத்துவதன் மூலமே இயேசுவின் மானுட ஏற்பின் மறை பொருளை எம்மால் ஓரளவாவது விளங்கிக் கொள்ள முடியம். குறிப்பாக இக்காலத்தில் விழித்திருந்து செப, தப முயற்சிகளில் ஈடுபட்டு கடவுளோடு ஒன்றித்திருப்பதும் முக்கியமானது.

இறை ஒன்றிப்பின்றி அடுத்திருப்பவரோடு உறவிலும், செயல்களினூடாகவும் ஒன்றிக்க முடியாது. 2023 இல் நடக்கவிருக்கும் உலக மாமன்ற கூட்டொருங்கியக்கமாகப் பயணிக்கும் திருஅவையாக மாறிட' என்ற அனைத்துலக முயற்சிகளின் ஆயத்தமாக இத்திருவருகைக் காலத்திலும், கிறிஸ்து பிறப்பு விழாக்க காலத்திலும் பங்கு அவையில் ஒன்றிப்பைக் கட்டியெழுப்ப முயற்சி செய்வோம். இயேசுவின் மானிட ஏற்பின் ஒன்றிப்பை எம் வாழ்க்கையில் பிரதிபலித்து வாழ சிறிய வழிகளிலாவது வாழ முயற்சி செய்வோம். அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு விழா வாழ்த்துக்கள் உரித்தாகுக.

# யாழ். மறைமாவட்டத்திற்கான அன்பிய வளவாளர்குழு – நிர்வாகக்குழு தெரிவு




அன்பிய வளவாளர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு கத்தோலிக்க ஊடகமைய மறை நதி மாநாட்டு மண்டபத்தில் கடந்த 11.12.2021 அன்று யாழ் மறைமாவட்ட அன்பிய ஆணைக்குழு இயக்குநர் அருட்பணி A. மில்வர்வாஸ் CMF அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப் பிரகாசம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு அன்பிய யூபிலி ஆண்டிற்காக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கி வைத்தார். இக்கூட்டத்தில் யாழ் மறைமாவட்ட அன்பிய வளவாளர் குழுவும், யாழ் மறைமாவட்ட அன்பிய நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

# இளவாலை மறைக்கோட்ட பொதுநிலையினர் ஒன்றுகூடல்




இளவாலை மறைக்கோட்ட பொது நிலையினர் கழகத்தின் மாதாந்தக் கூட்டமும், கருத்தமர்வும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் 12.12.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் பண்டத்தரிப்புத் தியான இல்லத்தில் தலைவர் Y. கீர்த பொன்கலன் தலைமையில் நடைபெற்றது.

முன்னாள் மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி M. யேசுரட்ணம் அடிகளினதும் பொது நிலையினர் கழக ஆன்மீக இயக்குநர் அருட்பணி றெக்னோ அடிகளாரினதும் பிரியாவிடை நிகழ்வும், மறைக்கோட்ட பொது நிலையினர் கழக புதிய ஆன்மீக இயக்குநர் அருட்பணி A. ஞானப்பிரகாசம் அடிகளாரின் வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றது. மறைக் கோட்ட முதல்வர் அருட்பணி ஜெயக்குமார் அடிகளாரினால் "கூட்டொருங்கியக்க ஆயர்கள் மாமன்றம்" பற்றிய கருத்துரை வழங்கப்பட்டது. இவ்வமர்வுக்கு எமது மறைக்கோட்டப் பங்குகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# குருத்துவ வாழ்வில் 58 ஆண்டுகள்

**ஓய்வு நிலை ஆயர்**
**மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின்**
**குருத்துவ அபிஷேக நாள் (21.12.2021)**



குருத்துவ வாழ்வில்
ஐம்பத்தெட்டு அகவையில்
ஆயனே உமது நாமம் வாழ்க!
உடல் உள நலன்கள் பலவும் பெற்று
அன்னை மரி அருளில் நீண்ட பல
ஆண்டுகள் வாழ வாழ்த்தி மகிழ்கின்றோம்

# எழுத்தாளர்களான குருக்களுக்கு விருது





யாழ் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இவ்வருடத்தில் வெளிவந்த நூல்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டன.

ஆன்மீகத்துறையில் வெளிவந்த நூல்களில் அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகத்தினால் வெளியிடப்பட்ட **"யாதுமானவன்"** என்னும் நூலும், அறிவியல் துறை சார்ந்து வெளிவந்த நூல்களில் அருட்பணி இ. ஸ்ரலின் அடிகளாரினால் வெளியிடப்பட்ட **"உள குணமாக்கல் முறைகள்"** என்னும் நூலும் சிறந்த நூலாகத் தெரிவு செய்யப்பட்டு நூலாசிரியர்களுக்கு கடந்த டிசெம்பர் 18ம் திகதி யாழ். பொதுநூலகத்தில் விருதுகள் வழங்கப்பட்டன.


பாதுகாவலன் பத்திரிகையின் ஆன்மீக உளவியல் சிந்தனைக் கட்டுரையாளர்களாகிய எம் இரு குருக்களையும் **பாதுகாவலன்** வாசக நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்தி மகிழ்கின்றோம்.

# பலாலி இளையோர் ஒன்றியத்தினால் இரத்ததான முகாம்



பலாலி அந்தோனியார்புரத்தில் அமைந்துள்ள வனத்து அந்தோனியார் ஆலயத்தில் இரத்ததான முகாம் ஒன்று கடந்த வாரம் நடைபெற்றது. இவ் இரத்த தான முகாமில் 50 இற்கும் மேற்பட்ட இளையோர் பங்கெடுத்து இரத்த தானம் செய்தமை குறிப்பிடத்தக்கது. இவ் இரத்ததான முகாமை T. E. தேவராஜன் அடிகளாரும், உதவிப் பங்குத்தந்தை நியூமன் அடிகளாரும் இணைந்து ஒழுங்கு செய்திருந்தனர்.

# துறவற சபைகளின் ஒன்றியத்திற்குப் புதிய நிர்வாகம்



துறவற சபைகளின் மாகாண முதல்வர்களின் மன்றத்திற்கான புதிய நிர்வாகம், கடந்த வாரம் தெரிவு செய்யப்பட்டது. அருட்பணி றொஷான் சில்வா அமதி அடிகளைத் தலைவராகவும், அருட் சகோதரி றொபினா பொலின் (HC), அருட்சகோதரன் பேர்ட்றம் பெரேரா, அருட்பணி சமின்ற ஜெயவர்த்தன (OSB), அருட்பணி இயூஜின் பெனடிக்ற் அமதி, அருட்சகோதரி ஷிறோமா குறும்பலப்பிட்டிய (SDS) ஆகியோரும் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்


## நெவாட் பௌண்டேஷன் லிமிட்டெட்

**மீன்வலை உருவாக்கல் தொழிற்சாலை**

**வடக்குக் கிழக்கு மக்களின் கடல் உணவுத்தேவையைப் பூர்த்தி செய்யவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் உங்கள் தேவைக்கேற்ப வலைகளை உற்பத்தி செய்து வழங்கும் நிறுவனம்.**









- ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரத்தில் முன்னணிவகிக்கும் யாணைக் (Yarn) கொண்டு, வாடிக்கையாளரின் தேவைக்கேற்பவும் விருப்பத்திற்கேற்பவும் மீன்பிடி வலைகளை உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- நன்னீர் மீன் பிடிப்பதற்கான வலைகளையும் உங்கள் தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.
- 3 இழை - 60 இழை வரையிலான வலைகளை உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உடனடியாக உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- விவசாயத் தேவைகளுக்கான வலைகளும் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றோம்.
- உங்களுக்குத் தேவையான நைலோன் நூல்களையும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். (3 இழை – 60 இழை வரை 100 கிராமாகப் பெற்றுக் கொள்ளலாம்)

**எம் அன்பார்ந்த வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எம் இனிய நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்.**

No.647, Beach Road, Jaffna, Sri Lanka E-mail: nefadfishnets@yahoo.com
Tel: +(94) 21 222 8919 Fax: +(94) 21 222 4781


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 25ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.